Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00
யாழ்ப்பாணம்

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 13 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 14 (29.10.2004) வெள்ளிக்கிழமை இதழ்: 29

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
FedEx Express
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
திருமுருகன் கொம் நெற்
259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Cylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் Tel - 021 222 7560 Fax - 021 222 7310

## 2006 டிசெம்பருக்கு முன்னர்

# ஜனாதிபதி தேர்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை

## அரசின் நிலைப்பாட்டை மங்கள சரமவீர அறிவிப்பு





(கொழும்பு)

2006 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துடன் தான் ஜனாதிபதி சந்திரிகாவின் இரண்டாவது பதவிக்காலம் முடிவடையும். எனவே அதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதென்ற பேச்சுக்கே இடமில்லை.

தனது நான்கு ஆண்டு பதவிக் காலத்தை முடித்த பின்னர் ஜனாதிபதி சந்திரிகா பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றினை நடத்துவார் என்று அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் – (12 ஆம் பக்கம் பார்க்க)

# அயர்லாந்து அதிகாரிகளுடன் சந்திப்பு ஆக்கபூர்வமானது; பயனுடையது!

## தமிழ்ச்செல்வன் கருத்து



(டப்ளின்)

அயர்லாந்தின் வெளிவிவகார அமைச்சின் உயரதிகாரிகளுடன் நடைபெற்ற சந்திப்பு, ஆக்கபூர்வமாகவும், பயனுள்ளதாகவும் அமைந்திருந்தது என்று தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் டப்ளினில் இருந்து தெரிவித்தார்.

அயர்லாந்து சென்றிருக்கும் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருக்கும், அயர்லாந்தின் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையில் வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பில் தமிழ்ச்செல்வனுடன் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன், பிரதிப் பணிப்பாளர் செல்வி கார்த்திகேயன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அயர்லாந்தின் பிரதி வெளிவிவகார அமைச்சர் கொனோர் லெனி ஹன், அமைச்சின் அரசியற்துறை இயக்குநரும் உதவிச் செயலாளருமான டேவிட் கூனி, அமைச்சின் அபிவிருத்தி - ஒத்துழைப்புப் பிரிவின் நிர்வாக அதிகாரி அனி ஓ கீவ் ஆகியோர் அயர்லாந்து அரசு தரப்பில் இந்தச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த இரண்டு மாதங்களுக்குள் பாரிய சூறாவளி தாக்குமாம்!

### திவயின பத்திரிகை தகவல்

(கொழும்பு)

அடுத்த இரண்டு மாதங்களுக்குள் இலங்கையின் வடக்கு-கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களை பாரிய சூறாவளி ஒன்று தாக்குவதற்கு வாய்ப்புக்கள் இருப்பதாக-வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரிகளை மேற்கோள்காட்டி 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது -

தற்போது நிலவுகின்ற காலநிலைத் தன்மைகளுக்கு இணங்க எதிர்வரும் மாதங்களில் இலங்கை மீது சூறாவளித்தாக்கம் ஒன்று ஏற்படும் சாத்தியம் உள்ளதாகக் கருதப்படுகின்றது.

இதன் தாக்கம் வடக்கு - கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் உக்கிரமாக இருக்கும். இன்னும் அறுபது முதல் எழுபது நாட்களுக்குள் இந்தப் பகுதிகளில் பாரிய (12 ஆம் பக்கம் பார்க்க)

# அரச, புலிகள் தரப்புடன் பேசியபின் சர்வதேசத்தின் நிலைப்பாடு அறிவிப்பு!

## கொழும்பில் அகாஷி



(கொழும்பு)

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கத்துடனும், தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் பேச்சுக்கள் நடத்திய பின்னர் - அது தொடர்பாக சர்வதேச சமூகத்தின் நிலைப்பாட்டை அறிவிக்க உள்ளதாக ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்று அலரிமாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே யசூஷி அகாஷி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

அரசாங்கத்துடனும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் பேச்சுக்களை நடத்தி சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக இருதரப்பினரதும் நிலைப்பாட்டினையும் அறிந்து கொள்வதே எனது விஜயத்தின் முக்கிய நோக்கம். (12 ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாக யோசனைப்படியே அரசு பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்!

## அகாஷியிடம் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உடனடியாக இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பாகப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் குழு, ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷியிடம் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டது.

நேற்று ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷியை சந்தித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் பேச்சு நடத்தினர். இந்தப் பேச்சுக்கள் சுமார் ஒன்றரை மணித்தியாலயம் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புப்பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சம்பந்தன் கருத்துத் தெரிவிக்கையில் -

ஜப்பானிய விசேட தூதுவர் எவ்விதத்திலும் சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும். இந்த முயற்சியில் தீவிரமாக ஈடுபடவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்.

அதனை நாங்கள் வரவேற்கின்றோம். நாட்டில் நிரந்தரமான, நியாயமான சமாதானம் ஏற்படவேண்டும் என்பதை, விசேடமாக நீண்ட காலமாக வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் விரும்புகின்றனர்.

ஆனால், சமாதானப் பேச்சுவார்த்தை சமாதான முயற்சிகள் மந்தகதியில் இருப்பதாக அவருக்குச் சுட்டிக்காட்டினோம்.

இன்றைக்கு சமாதான முயற்சியை முன்னெடுப்பதற்குப் பதிலாக எங்களது கணிப்பின்படி அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதா? அல்லது சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவேண்டுமா என்பதில் கவனம் செலுத்துவதாகச் சுட்டிக்காட்டினோம்.

அரசாங்கத்துக்குள்ளேயே அவர்களது தோழமைக் கட்சியான ஜே.வி.பிக்கும் அவர்க (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR Your friend in the skies...

## புனரமைக்கப்பட்ட வீடுகள் இன்று கையளிப்பு

நிகொட் வீடமைப்புத் திட்டத்தின கீழ் நிகொட் நிதி உதவியுடன் கியூடெக் ஸ்தாபனத்தால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட 120 வீடுகள் இன்று உரியவர்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வு பிற்பகல் 3.20 மணிக்கு குருநகர் கடற்கரைவீதி அண்ணா சிலையடிக்கு அருகாமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், சிறப்பு விருந்தினராக நிகொட் பிரதித் திட்டப்பணிப்பாளர் க.நவரத்தினராசா, யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை எச்.சகாயநாயகம், அரசசார்பற்ற இணையங்களின தலைவர் வி.சிறீசக்திவேல், தமிழர் புனர்வாழ்வு கழகத் தலைவர் சு.ஜெயராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.







யாழ்.மாவட்டத்தில்

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,
தமிழ் மாணவர் ஒன்றியம் ~ யாழ். மாவட்ட வலயக் கல்விப் பணிமனைகளின் இணைந்த ஆதரவுடனும்,

கிளிநொச்சி மாவட்டத்தில்

தமிழ் மாணவர் ஒன்றியம் ~ கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை ஆகியவற்றின் இணைந்த ஆதரவுடன்

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

க.பொ.த. (சா/ த) - 2004 டிசம்பர்
பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான
முன்னோடிக் கருத்தரங்குகளை
(பரீட்சைகளும், மீட்டல் வகுப்புகளும்)
யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும்
இலவசமாக நடாத்த உள்ளது.

மேலதிக விபரங்கள் வெகு விரைவில்
நமது ஈழநாடு நாளிதழில் வெளிவரும்

பாடசாலை பரீட்சார்த்திகளும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளும்
இக் கருத்தரங்கில் பங்குபற்றலாம்

யாழ்.மாவட்டத்துக்கான இணை அனுசரணை

IIS 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 222 2831

45 வருடகாலசேவையில் ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டஸ் 212, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்.

BOC தேசத்தின் வங்கியாளர் இலங்கை வங்கியின் 18 plus இளம்பருவத்தினருக்கு அன்புடன்....

SICS கணினி சேவைகள் இல.125A ,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். எங்களின் நோக்கம், உங்களின் தொழில் நுட்பமுன்னேற்றம்.

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம 302, கே.கே.எஸ் வீத', யாழ்ப்பாணம்.

UNIT 347, K.K.S. Road, Jaffna

Global Info IDM (PVT) LTD.. Authorized ICT Eduaction JAFFNA CENTER IDM The Nation's ICT Academy 451, K K S ROAD, JAFFNA TP 021-4591398

சொலெக்ஸ் பல்முக்கு கண்ணாடியகம 516, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Softview Computer College 43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna

S.T.P 73, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.


13 ஆம் ஆண்டு நினைவுகள் | 9 ஆம் ஆண்டு நினைவுகள்



வீரப்பிறப்பு 28 03 1969 — வீரச்சாவு 09 09 1991

2 ஆம் லெப். சேரன் / மாணிக்கம்
இராஜரட்ணம் ஜெயராஜ் (லவன்)
அளவெட்டி
(மணலாறு மின்னல் நடவடிக்கையில்)



வீரப்பிறப்பு 14 04 1976 — வீரச்சாவு 29 10 1995

கரும்புலி லெப்.தொண்டன்
இராஜரட்ணம் கிருஸ்ணராஜ் (கண்ணன்)
அளவெட்டி
(அளவெட்டிப் பகுதியில் கரும்புலி நடவடிக்கையில்)

சின்னச் சின்னக் கனவுகள்
வந்துபோகும் – எங்கள்
செல்வங்களின் நினைவுகளில்
கண்ணீர் வழியும்
தேசம் விடியும் கனவு
சுமந்தீர்
தேகம் தந்து ஈகம்
செய்தீர்
உங்களின் கனவுகள் எங்களுடன்...

அளவெட்டி மத்தி,
அளவெட்டி.

நினைவுடன்
அப்பா, அம்மா, சகோதரர்கள்.

(C\3292)

- திருமலை - புலிகளின் முகாம் தொடர்பாக -

# இருதரப்பினதும் முரண்பட்ட அறிக்கைகள் பாதுகாப்பு அமைச்சில் விசேட கலந்துரையாடல்

(திருகோணமலை)

திருகோணமலைத் துறைமுகத்தை இலக்கு வைத்து அதனைச் சூழவுள்ள பகுதிகளில் விடுதலைப் புலிகள் அமைத்துள்ள முகாம்கள் தொடர்பாக, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் வழங்கிய இறுதி அறிக்கைக்கும், கூட்டு நடவடிக்கைத் தலைமையகம் வழங்கிய இறுதி அறிக்கைக்கும் இடையில் முரண்பாடுகள் இருப்பதால்- இது தொடர்பாக மீண்டும் ஆராய்ந்து பார்ப்பதற்குப் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக உடனடியாகக் கலந்துரையாடி தனக்குத் தெரியப்படுத்துமாறு கடந்த 26 ஆம் திகதி கூடிய தேசிய பாதுகாப்புச் சபைக்கு ஜனாதிபதி சந்திரிகா ஆணை பிறப்பித்துள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமையன்று பாதுகாப்பு அமைச்சில் பாதுகாப்புச் செயலாளர் தலைமையில் கண்காணிப்புக்குழு அதிகாரிகளுக்கும், முப்படைத் தளபதிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ள கலந்துரையாடலின் போது இது தொடர்பாக மீண்டும் கலந்துரையாடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் போது எடுக்கப்படும் தீர்மானங்களை உடனடியாகத் தெரியப்படுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா தேசிய பாதுகாப்புச் சபைக்கு அறிவித்துள்ளார்.

திருகோணமலைத் துறைமுகத்தையும் அதனைச் சூழவுள்ள இராணுவ முகாம்களையும் இலக்கு வைத்துப் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்குப் பின்னர் புலிகளால் 15 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான அறிக்கையொன்றும் பாதுகாப்பு அமைச்சால், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையில் 15 முகாம்கள் மட்டுமே அமைக்கப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் தற்போது இந்த முகாம்களின் எண்ணிக்கை 21 ஆக அதிகரித்துள்ளதாகவும் இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையை கவனத்தில் எடுத்துக் கொண்டு, கண்காணிப்புக் குழு வழங்கிய இறுதி அறிக்கையில், 15 முகாம்களில் 3 முகாம்களுக்குத் தம்மால் போகமுடியாது போனதாகவும், ஒரு முகாமைப் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரால் பார்வையிடப்பட்ட 11 முகாம்களில் மணிராசன் குளம் முகாமைத் தவிர, ஏனைய 10 முகாம்களும் போர் நிறுத்த ஒப்பந்த காலத்துக்கு முன்னர் அமைக்கப்பட்டிருந்ததாகவும் கண்காணிப்புக் குழுவினரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், விடுதலைப்புலிகளால் அமைக்கப்பட்டுள்ள இந்த முகாம்களால் திருகோணமலைத் துறைமுகத்துக்கு ஆபத்து இருப்பதாக அவர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளால் அமைக்கப்பட்டுள்ள 15 முகாம்களைப் பற்றி ஆராய்ந்து இராணுவத்தின் உளவுப் பிரிவினர் வழங்கிய அறிக் கையும், கண்காணிப்புக் குழுவினர் வழங்கிய அறிக்கையும் ஒன்றுக் கொன்று முரணாக இருந்தபோதிலும், இராணுவத்தின் உளவுப் பிரிவினர் வழங்கிய அறிக்கையை நூற்றுக்கு நூறு வீதம் நம்புவதாக பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

இதேவேளை, கண்காணிப்புக்குழுவினர் வழங்கிய அறிக்கையை மறுதலிக்க முடியாவிடினும், இது தொடர்பாக கலந்துரையாடவேண்டும் என அந்த அதிகாரி தெரிவித்தார். (தே)

# புலிகளின் உயர்மட்டக்குழு அயர்லாந்து செல்லவுள்ளது

(டப்ளின்)

அயர்லாந்தின் நாட்டின் தலைநகர் டப்ளினில் அயர்லாந்து நாட்டின் அரச பிரதிநிதி களுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவினர் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளனர்.

ஐரோப்பிய, ஸ்கண்டிநேவிய நாடுகளுக்கு விஜயம் செய்திருந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் உயர்மட்டக் குழுவினர் தமது விஜயத்தின் இறுதிக்கட்டமாக அயர்லாந்துக்கு சென்றுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன், விடுதலைப் புலிகளின் சமாதான செயலகச் செயலாளர் புலித்தேவன் ஆகியோர் அடங்கிய குழுவினர் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளனர்.

# சட்டவிரோதமாகக் குடியேறியுள்ள இலங்கையருக்குப் பொதுமன்னிப்பு

## மலேசிய அரசு அறிவிப்பு

(கொழும்பு)

மலேசியாவில் சட்ட விரோதமாகக் குடியேறியுள்ள இலங்கையர்கள் அந்த நாட்டிலிருந்து வெளியேறுவதற்கான பொதுமன்னிப்புக் காலமொன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொதுமன்னிப்புக் காலம் அந்த நாட்டில் சட்டவிரோதமான முறையில் குடியேறியுள்ள சகல வெளிநாட்டவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக, வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் இந்தப் பொதுமன்னிப்புக் காலம்- இரண்டு வாரகாலத்துக்கு அமுலில் இருக்கும். இந்தக் கால எல்லைக்குள் மலேசியாவில் இருந்து வெளியேறும் சட்டவிரோத குடியேற்றவாசிகள் அபராதம் செலுத்தத் தேவையில்லை.

எனினும், குற்றச் செயல்களோடு தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில், நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ள வெளிநாட்டவர்களுக்கு இந்தப் பொதுமன்னிப்புக் காலம் வழங்கப்படமாட்டாது என்று மலேசிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

இதேவேளை மலேசியாவில் சட்ட விரோதமாகக் குடியேறியுள்ள இலங்கையர்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டும் விசேட செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மலேசியாவுக்கான இலங்கை தூதரகம் அறிவித்துள்ளது.

# புலிகள் - படையினர் சந்திப்பு நாளை வவுணதீவில் இடம்பெறும்

கிழக்குப்படை அதிகாரிகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மாதாந்த கலந்துரையாடல் நாளை மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இராணுவத் தரப்பிலிருந்து பொலநறுவையின் 23ஆவது டிவிசனின் தளபதி பிரிகேடியர் வஜிர குணவர்த்தன, மட்டக்களப்பு 233 ஆவது பிரிகேட் தளபதி கேணல் லக்சிறி அமரதுங்க ஆகியோரும், புலிகள் தரப்பிலிருந்து மட:டு-அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசலயன் உட்பட ஏனைய அரசியல் பிரமுகர்கள் சிலரும் கலந்து கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# போர் நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் ஒரு ஆயுதக்குழுவே பலமடைந்துள்ளது

## ஆனந்தசங்கரி ஜேர்மன் அமைச்சுக்கு கடிதம்

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் ஒரு ஆயுதக்குழு மாத்திரமே பலமடைந்துள்ளது. இதனால் அரசு தனது பொதுமக்களைக் காப்பாற்ற முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு உட்பட்டுள்ளதாக வீ.ஆனந்தசங்கரி ஜேர்மனிய அமைச்சர் ஒஸ்லோ பீலிக்குக்கு அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தால் மற்றைய ஆயுதக் குழுக்கள் அபாயகரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக தனது கடிதத்தில் குறிப்பட்டுள்ள ஆனந்தசங்கரி, விடுதலைப் புலிகளைத் தவிர ஏனைய ஆயுதக் குழுக்களை நிராயுதபாணிகளாக ஆக்கவேண்டுமென ஒப்பந்தத்தில் ஒரு சரத்தை உட்படுத்தியதாலேயே ஏனைய கட்சிகளுக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகிய நாள்முதல் 250 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். எனினும் இந்தக் கொலை தொடர்பாக இதுவரையும் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளும் - அரசாங்கமும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்மூலம், ஏனைய அரசியல் கட்சிகளை நிராயுத பாணிகளாக்கிய செயல் இரக்கமற்றதே. அதே நேரம் அரசின் கட்டுப்பாட்டுப் பகுதியில் தமது நிர்வாகத்தைப் புலிகள் நடத்திச் செல்லவும், இந்த ஒப்பந்தம் மூலம் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தே)

# வரவு - செலவுத் திட்டம் குறித்து ஆராய்ந்தே ஆதரவளிப்போம்

## ஜாதிக ஹெல உறுமய

அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் தொடர்பாக நன்கு ஆராய்நத பின்னரே, அதற்கு ஆதவளிப்பது குறித்து தீமானிக்கவிருப்பதாக ஜாதிக ஹெல உறுமயக் கட்சி தெரிவித்துள்ளது. அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத் திட்டத்தால் மக்களுக்கு கிடைக்கும் சலுகைகள் மற்றும் புத்தசாசனம் தொடர்பாக முன்வைக்கப்படும் விடயங்கள் ஆகியவற்றைக் கவனத்திற்கொண்டே அதற்கு ஆதரவு வழங்குவது பற்றி முடிவு எடுக்கப்படுமென, ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பிரதித் தலைவர் ஒமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பாக கட்சி ஏற்கனவே கொண்டிருந்த நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை எனவும் தெரிவித்தார். அரசாங்கத்தின் புதிய வரவு-செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 18 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

# நாடாளுமன்றத்தின் அமர்வுகளுக்கு வரும் விருந்தினர் தொகை மட்டுப்படுத்த முடிவு!

நாடாளுமன்றக் கூட்டத்தொடர்கள் நடைபெறும் தினங்களில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது விருந்தினர்களை நாடாளுமன்றத்துக்குள் அழைத்துச் செல்வது மட்டுப்படுத்தப்படவுள்ளது.

சபாநாயகர் ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற உள்விவகாரக் குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்டுப்பாடற்ற அளவில் விருந்தினர்களை அழைத்துச் செல்வதற்கு முன்னர் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. வரவு-செலவுத் திட்டத்தின் மீதான நாடாளுமன்ற விவாதத்தின் போது அமைச்சுக்களின் சார்பில் 25 அதிகாரிகள் மாத்திரமே கலந்துகொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நடாளுமன்ற வளாகத்தில் வணக்கத் தலங்களை அமைப்பதற்கும் இந்தக் கூட்டத் தொடரின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய வணக்கத்தலங்களும் அமைக்கப்படவுள்ளன. (தே)

# பி.பி.ஸியில் ஒலிபரப்பாகிய செய்திக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் மறுப்பு

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலகியவர்களும், மற்றும் புதியவர்களுமென மொத்தம் ஐந்து பேர் விடுதலைப் புலிகள் அமைப்பில் திருமலை நகர்ப்பகுதியில் இணைந்த வேளை அவர்களை நிலாவெளிப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் முகாமுக்கு போராளியொருவரால் அழைத்துச் செல்லப்பட்ட வேளை- சாம்பல்தீவில் வைத்து அவர்களை கடற்படையினர் தமது சோதனை நிலையத்தில் தடுத்து வைத்து, விசாரணை செய்த பின்னர், விடுதலை செய்யமுடியாதெனத் தெரிவித்ததாக திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்த இவர்கள், போராளியொருவரால் நிலாவெளிப் பகுதியிலுள்ள புலிகளின் முகாமுக்கு வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டவர்களை சாம்பல்தீவில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் வழிமறித்த கடற்படையினர் சோதனையை மேற்கொண்டதுடன், அடையாள அட்டையைக் கோரினர். இதன்போது இவர்களை அழைத்துச் சென்ற போராளி, அவர்களில் சிலர் ஏற்கனவே புலிகள் அமைப்பில் இருந்தவர்களெனவும், மற்றையவர்கள் புதிதாக இணைந்தவர்களெனவும் உறுதிப்படுத்தினார்.

ஆனால், கடற்படையினர் இந்த ஐவரையும் அழைத்துச் சென்று விசாரணைக்குட்படுத்தியதுடன் விடமுடியாதெனவும் தடுத்து வைத்தனர்.

இது தொடர்பாக எமக்குத் தகவல் கிடைத்தவுடன் நாம் போர் நிறுதத் கண்காணிப்புக் குழுவிற்குத் தெரியப்படுத்தியதுடன், எமது இயக்கத்தில் இணைக்கும் அனுமதி உள்ளது. எனவே இவர்களை தடுத்து வைக்கமுடியாதெனவும் அவர்களை விடுதலை செய்ய வேண்டுமெனவும் தெரிவித்தோம்.

ஆனால், கண்காணிப்புக்குழு இவர்கள் ஐவரையும் பொறுப்பெடுத்து தம்முடன் அழைத்துச் சென்று விட்டனர். ஆனால் நாம் போராட்டத்துக்கு இணைபவர்களை கண்காணிப்புக் குழு பொறுப்பெடுப்பது பிழையான காரியமென நாம் கண்காணிப்புக் குழுவுக்குத் தெரிவித்த போது கண்காணிப்புக்குழு அந்த ஐவரையும் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

தற்போது அவர்கள் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் நேற்றுமுன்தினம் இரவு பி.பி.ஸி செய்திச் சேவையில் இந்த ஐவரும் பொலிஸாரிடம் சரணடைந்தாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இந்தச் செய்தியில் கூறப்பட்டது போல எந்தவித சரணடைதலும் இடம்பெறவில்லை.

எனவே பி.பி.ஸியில் தெரிவிக்கப்பட்ட செய்தியில் எந்தவித உண்மை யுமில்லையென்பதையும், இது ஒரு முரண்பட்ட செய்தி என்பதையும், எமது ஆளணியை நாம் இணைத்துக் கொள்ளும் விடயத்திலும் ஒரு நெருக்கடியை ஏற்படுத்தவுமே இவ்வாறான தகவல் வெளிவந்துள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.

# சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. மோதல்; தீர்வுக்கு உயர்சபையொன்று அமைப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினுள் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் - ஜே.வி.பியினருக்கும் இடையில் தோன்றியுள்ள கருத்து மோதல்களுக்கு தீர்வுகாண்பதற்கு, அதியுயர் அரசியல சபையொன்றை நிறுவுவதற்கு இருதரப்பினரும் உடன்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இந்த அதியுயர் அரசியல் சபைக்கு இரு கட்சிகளில் இருந்தும் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் அநுர பண்டாரநாயக்க ஆகியோரையும், ஜே.வி.பி. சார்பில் ரில்வின் சில்வா, விமல் வீரவன்ச ஆகியோரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்தக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பினருக்கும் இடையே கருத்துமோதல்கள் ஏற்படும்போது, இந்த அதியுயர் சபைகூடிக் கலந்துரையாடி, இணக்கத்தீர்வை ஏற்படுத்துவதே இந்த சபையின் நோக்கமாகும்.

அண்மையில் அமைச்சர்கள் அநுர குமார திஸநாயக்காவுக்கும், மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் கருத்து மோதல்கள் தோன்றின. அமைச்சர் அநுரகுமார திஸநாயக்கவும், நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவும், ஜனாதிபதியின் உரையை விமர்சனம் செய்து உரையாற்றியதை அடுத்து - கூட்டுக்கட்சிக்குள் விமர்சனங்கள் எழுந்தன.

இவ்வாறான கருத்து மோதல்கள் தொடர்ச்சியாக இடம்பெறுமானால், அது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் எதிர்கால நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படும் என்பதால், இவ்வாறான சம்பவங்களைத் தடுப்பதற்காகவே இரு தரப்பினரையும் பிரதிநிதிகளாகக் கொண்ட இந்த அதியுயர் சபை அமைக்கப்பட்டுள்ளது.



# நாக்பூரில் 415 ஓட்டங்களால் அவுஸ்ரேலியா முன்னிலையில்



(நாக்பூர்)

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இனிங்ஸில் 3 விக்கெட் இழப்புக்கு 202 ஓட்டங்களை நேற்றுக் குவித்த அவுஸ்ரேலிய அணி 415 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.

நேற்றுமுன்தினம் 2 ஆவது நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி முதல் இனிங்ஸில் 77 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 146 ஓட்டங்களை எடுத்திருந்தது. கை.்.ப் 47 ஓட்டங்களுடனும், பட்டேல் 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று 3 ஆவது நாள் ஆட்டத்தில் மேலும் 53 ஓட்டங்களை எடுத்தால் பலோ ஒன்னை தவிர்க்கலாம் என்ற நிலையில் இந்தியா தொடர்ந்து ஆடியது.

வோர்ன் வீசிய ஆட்டத்தின் 2 ஆவது ஓவரின் 2 ஆவது பந்தில் பட்டேல் பவுண்டரி அடித்தார். அதற்கு அடுத்த பந்தில் அவர் ஆட்டமிழந்தார். அவர் 20 ஓட்டங்களை எடுத்தார்.

கஸ்பரோவிச் வீசிய அடுத்த ஓவரில் கை.்.ப் 3 ஓட்டங்களை எடுத்து அரைச்சதத்தைத் தொட்டார். 147 பந்துகளில் 6 பவுண்டரி, ஒரு சிக்ஸருடன் 50 ஓட்டங்களை எடுத்தார்.

டெஸ்டில் அவரது 2 ஆவது அரைச்சதம் இதுவாகும். 82 ஆவது ஓவரில் புதிய பந்து எடுக்கப்பட்டது. புதிய பந்தில் எஞ்சிய இந்திய விக்கெட்டுக்கள் சரிந்தன.

அகர்கர் 15 ஓட்டங்களுடனும்,



முரளி கார்த்திக் 3 ஓட்டங்களுடனும், சகீர்கான் ஓட்டமெதுவும் எடுக்காமல் ஜிலெஸ்பி பந்திலும், கை.்.ப் 55 ஓட்டங்களில் (151 பந்தில் 7 பவுண்டரி, 1 சிக்ஸர்) மக்ரா பந்திலும் ஆட்டமிழந்தனர்.

இந்திய அணி 91.5 ஓவரில் 185 ஓட்டங்களுடன் சுருண்டது. நேற்றுக் காலை ஆட்டத்தைத் தொடங்கிய இந்திய அணி மேலும் 39 ஓட்டங்கள் எடுப்பதற்குள் எஞ்சிய 5 விக்கெட்டை இழந்தது.

இந்திய வீரர்களில் கை.்.ப் அதிகபட்சமாக 55 ஓட்டங்களை எடுத்தார். அவுஸ்ரேலியா தரப்பில் ஜிலெஸ்பி 56 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டும், மக்ரா 3 விக்கெட்டும், வோர்ன் 2 விக்கெட்டும் கைப்பற்றினர்.

பலோ ஒன்னைத் தவிர்க்க 199 ஓட்டங்களை எடுக்கவேண்டும். ஆனால், இந்திய அணி 14 ஓடடங்கள் குறைவாக 185 ஓட்டங்களை எடுத்தது. இதனால் பலோ ஒன் ஆனது.

அவுஸ்ரேலிய கட்டன் கில்கிறிஸ்ட் பலோ ஒன் கொடுக்கவில்லை. தொடர்ந்து பந்துவீசினால் தங்களது பந்து வீச்சாளர்கள் சோர்ந்து விடுவார்கள் என்று கருதி அவர் இந்த முடிவை மேற்கொண்டார்.

பெங்களூரில் நடந்த டெஸ்டிலும் இதேமாதிரி அவுஸ்ரேலியா பலோ ஒன் கொடுக்காமல் இருந்தது.

213 ஓட்டங்கள் முன்னிலையில்



அவுஸ்ரேலியா 2 ஆவது இனிங்ஸை ஆடியது. தொடக்க வீரர்களாக ஹைடனும், லாங்கரும் களமிறங்கினார்கள். மதிய உணவு இடைவேளையின்போது அவுஸ்ரேலியா 2 ஆவது இனிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 19 ஓட்டங்களை எடுத்திருந்தது.



மதிய உணவு இடைவேளைக்கு ஹைடன் 9 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அப்போது அவுஸ்ரேலிய அணியின் ஸ்கோர் 19 ஆக இருந்தது. அவரது விக்கெட்டை சகீர்கான் கைப்பற்றினார். 2 ஆவது விக்கெட்டுக்குப் பின் லாங்கருடன் கடிச் ஜோடி சேர்ந்தார்.

இருவரும் நிதானமாக விளையாடி வந்தனர். லாங்கர் 30 ஓட்டங்கள் எடுத்த நிலையில் முரளி கார்த்திக் பந்தில் லக்ஷ்மனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அதனைத் தொடர்ந்து மார்ட்டின் கடிச்சுடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் சிறப்பாக விளையாடினர்.

கடிச் முதலில் மெதுவாகவும், பின் விரைவாகவும் ஓட்டங்களைச் சேர்த்தார். அவர் 99 ஓட்டங்களில் முரளி கார்த்திக் பந்தில் எல்.பி. டபிள்யூ ஆகி சதம் அடிக்கும் வாய்ப்பைத் தவறவிட்டார்.

அடுத்து கிளார்க் மார்ட்டினுடன் ஜோடிசேர்ந்தார். 3 ஆவது நாள் ஆட்டமுடிவில் அவுஸ்ரேலியா 3 விக்கெட் இழப்புக்கு 202 ஓட்டங்கள் எடுத்துள்ளது. மார்ட்டின் 41 ஓட்டங்களுடனும், கிளார்க் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

அவுஸ்ரேலியா, இந்தியாவை விட 415 ஓட்டங்கள் அதிகமாக எடுத்துள்ளது. இன்னும் 2 நாள் இருப்பதால் அவுஸ்ரேலியாவுக்கு இந்த டெஸ்டில் வெற்றிபெறும் வாய்ப்பு அதிகமாகவுள்ளது.




# நியூஸிலாந்துடனான 2 ஆவது டெஸ்ட்; தோல்வியின் விளிம்பில் பங்களாதேஷ்



நியூஸிலாந்து - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் சிட்டகொங்கில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று பங்களாதேஷ் அணி தனது இரண்டாவது இனிங்ஸில் 8 விக்கெட்டுக்களை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றதுடன் தோல்வியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ளது.

முன்னதாக நேற்றுமுன்தினம் 3 விக்கெட்டுக்களை இழந்து 82 ஓட்டங்களை தனது முதல் இனிங்ஸில் பெற்ற பங்களாதேஷ், நேற்றைய தினம் ஆட்டத்தைத் தொடர்ந்த போதிலும் விற்றோரியின் சுழற்பந்து வீச்சில் விக்கெட்டுக்கள் மளமளவெனச் சரிந்தன. இதனால் அவ்வணி தனது முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 182 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இந்த அணி சார்பாக ஜாவிட் ஓமர் 58, அப்ரப் அகமட் 20, காலித் மசூத் 18, முசிபூர் ர.்.மான் 15, மொகமட் ரபீக் 32 ஓட்டங்களையும், இருவர் ஓட்டமெதனையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் விற்றோறி 6, வைஸ்மன் 3, பிராங்ளின் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பலோ ஒன்னிலிருந்த பங்களாதேஷ் மீளவும் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த நிலையில், நேற்றைய ஆட்டநேர முடிவின்போது அந்த அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இரண்டாவது இனிங்ஸிலும் பங்களாதேஷ் விக்கெட்டுக்கள் வீழ்த்தப்படுவதற்கு விற்றோறியின் சுழற்பந்துவீச்சே காரணமாகும்.

இதன்படி இரண்டாவது இனிங்ஸில் பங்களாதேஷ் அணி சார்பாக அப்ரப் அகமட் 28, ராஜின் சாலே



35, அலொக் கபாலி 13, காலித் மசூத் 51, முசிபூர் ர.்.மான் 20 மற்றும் மொகமட் ரபீக், ரபாஸ் பாசியா ஆகிய இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 30, 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் விற்றோறி 4, வைஸ்மன் 2, ஓரம் மற்றும் பிராங்ளின் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



*அவுஸ்ரேலியாவில் நடந்த ரெனிஸ் போட்டியில் 2 ஆவது சுற்றில் முன்னணி வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் அதிர்ச்சிகரமாகத் தோற்றார்.*

*அவரைத் தோற்கடித்த ரஷ்யாவைச் சேர்ந்த தகுதி நிலை வீராங்கனை அலினா ஜிட்கோவாவை படத்தில் காணலாம்.*

# 208 ஓட்டங்களுடன் இலங்கையை பாகிஸ்தான் அணி சுருட்டியது!

பாகிஸ்தான் அணிக்கு எதிராக நேற்று ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் - இலங்கை அணி 208 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து





சுருண்டது.

கராச்சியில் நேற்று ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனையடுத்து இலங்கை அணி துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. ஜெயசூரியவும், அத்தப்பத்துவும் தொடக்க வீரர்களாகக் களமிறங்கி அபாரமான துடுப்பாட்டத்தை ஆரம்பித்தனர்.

ஆரம்பத்தில் பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள் திணறிய போதும் - இலங்கை அணி 65 ஆவது ஓட்டங்களை எடுத்திருந்த போது ஜெயசூரியவின் விக்கெட் வீழ்த்தப்பட்டது.

61 பந்துகளில் 4 பவுண்டரியுடன் 26 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஜெயசூரியவை கனேரியா எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழக்கச் செய்தார்.

இதனையடுத்து நன்றாக ஆடிக்கொண்டிருந்த அத்தப்பத்து 44 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டமிழுந்தார்.

அதேவேளை, இரண்டாவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த சங்ககார 13 ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து ஜெயவர்த்தன களமிறங்கி 16 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், ரியாஸ் அப்ரிடியின் பந்துவீச்சில் இன்ஸமாமிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

ரி.ரி.சமரவீர 5 ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்து ஆடிக்கொண்டிருந்த நிலையில் அப்துல் ரஸாக் அவரை ஆட்டமிழக்கச் செய்தார்.



44 பந்துகளில் 13 ஓட்டங்களை மட்டுமே இவர் பெற்றிருந்தார்.

அடுத்ததாக ஜெகான் முபாரக் களம் இறங்கிய போதும் அவரால் 13 ஓட்டங்களுக்கு மேல் எடுக்க முடியவில்லை. அவரையும் அப்துல் ரஸாக்கே வீழ்த்தினார்.

தொடர்ச்சியாக இலங்கை அணியின் விக்கெட்டுக்கள் சரிந்துகொண்டிருந்த நிலையில், களுவிதாரண களமிறங்கி சற்று நம்பிக்கையூட்டக் கூடிய வகையில் ஆடினார்.

ஆனாலும், மறுமுனையில் வந்த சமிந்த வாஸ் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததால் நெருக்கடி தொடர்ந்து நீடித்தது. அடுத்து ம.்.ரூப்பும் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததால் ஹேரத் களமிறங்கினார்.

இதற்கிடையில் களுவிதாரண 54 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். 104 பந்துகளில் 4 பவுண்டரி, ஒரு சிக்ஸருடன் அவர் இந்த ஓட்டங்களைப் பெற்றார்.

அவரது ஆட்டமிழப்பு நடந்த சற்று நேரத்திலேயே ஹேரத் 12 ஓட்டங்களுடன் தனது விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

இதன்மூலம் இலங்கை அணி 208 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

முதல் இனிங்ஸில் அப்துல் ரஸாக் 23.1 ஓவர்கள் பந்துவீசி 35 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

டனிஸ் கனேரியா 3 விக்கெட்டுக்களையும், ரியாஸ் அப்ரிடி 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

# சட்டவிரோத மீன்பிடிக் கருவிகளை தடைசெய்யக் கோரி ஊர்வலம்!

## 31 ஆம் திகதி காலியில் நடைபெறவுள்ளது

சட்டவிரோத மீன்பிடி கருவிகளைத் தடை செய்யக் கோரியும், மீன் வளங்களின் அதிகபட்ச சுரண்டலை நிறுத்தக் கோரியும் தெற்கு, வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த கடற்தொழில் அமைப்புகளையும் மற்றும் மேல், வடமேல் மாகாணங்களைச் சேர்ந்த கடல் தொழில் அமைப்புகளையும் இணைத்து - அரசுக்கு எதிரான பாதயாத்திரையையும், எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றையும் இந்த மாதம் 31 ஆம் திகதி காலியில் தேசிய மீனவ ஒத்துழைப்புப் பேரவை நடத்தவுள்ளது.

தெற்கு கடற்பரப்பில் அம்பாந்தோட்டை தொடக்கம் பேருவளை வரையான பிரதேசங்களில் - சுருக்கு வலை, லயிட்கோஸ் மற்றும் டைனமற் போன்ற சட்டவிரோத மீன்பிடிமுறைகள் பரந்து காணப்படுகின்றன.

வடமேல் மற்றும் மேற்குக் கடல் பரப்பில் தாய்வலை, சுருக்குவலை, லைலாவலை, இழுவைவலைச் செயற்பாடுகள் போன்று கற்பிட்டியை அண்டிய புத்தளம் களப்பு, நீர்கொழும்பு களப்பு பகுதிகளிலும் ...ன்று அதிகமாகச் செயற்படுத்தப்படுவதுடன், டைனமற் பாவித்தல் வடமேல் கடலில் அதிகமாகக் காணப்படுகிறது.

கிழக்கே பொத்துவில் தொடக்கம் முல்லைத்தீவு வரை லயிட்கோஸ், டைனமைற் மீன்பிடித்தல் அதிகமாக இடம் பெறுகிறது.

வடக்கே மன்னார் கடற்பரப்பிலும் - யாழ்ப்பாணம், தீவகம், வடமராட்சி கடற்பரப்புகளில் இந்திய இழுவைப் படகுகள் செய்கிற அழிவுகள் மிக மோசமானதாகும்.

இதைத் தடுப்பதற்காக இது வரை எந்தவித பயனுடைய செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த இந்தியப் படகுகள் - சமூக பொருளாதார வகையிலும், சூழல் அழிவு முறையிலும் பல அழிவு முறைகளைச் செய்கின்றன.

மீன் வளங்கள் நிலையான பயன்பாட்டுக்கு போதியளவு இடமில்லாதபடியால், மீனவக் கைத்தொழிலை வெகு நாட்களுக்குத் தொடரமுடியாத நிலையும் ஏற்படும்.

சமதன்மை, மனித உரிமைகளை மதிக்க ஏழை மக்களுடைய வாழ்க்கையை மேம்படுத்த, தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்த, உறுதியளித்த அரசு- இந்த வளங்களின் அழிவை இன்னும் பார்த்துப்பார்த்து சும்மா இருக்கமுடியாது.

அரச இறைமையுடையவர்கள் அரச அதிகாரிகள், நீதி மற்றும் சமாதானத்தைப் பாதுகாக்கின்றவர்கள் உட்பட, உத்தரவாதமிக்க அனைவருக்கும் இந்தக் காரணிகளை எடுத்துக்காட்டி, நீதி மற்றும் சமத் துவத்தை நிலைநாட்ட விழித்தெழ வைக்கவேண்டும்.

பிரதான கோரிக்கைகளாக -

சட்டவிரோத மீன்பிடிக் கருவிகளைத் தடைசெய்தல், சட்டவிரோத மீன்பிடிக் கருவிகளின் ஆணைக்குழுவின் அறிக்கையை நாட்டில் முன்வைத்து, அதிலுள்ள பிரதிபலன் மிக்க யோசனைகளை நடைமுறைப்படுத்தல்.

இந்திய இழுவைப்படகுகள் இலங்கைக் கடற்பரப்பில் ஏற்படுத்துகிற அழிவை நிறுத்த நடவடிக்கை எடுத்தல்.

சிறுதொழில் செய்யும் மீனவர்களைப் பாதுகாத்தல் போன்ற காரணிகளை முன்வைத்து, அரசுக்கும் மற்றும் அரச அதிகாரிகளுக்கும் வெளிப்படுத்த, சட்டத்தை ஒழுங்கை நிலைநாட்ட, எதிர்ப்புப் பாதயாத்திரை இந்த மாதம் 31 ஆம் திகதி தொடன்துவ கடல் தொழில் துறைமுகத்திலிருந்து, காலி பஸ் நிலையம் வரை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன், இதை அடுத்து எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பாதயாத்திரையிலும், எதிர்ப்பு ஊர்வலத்திலும் இலங்கையிலுள்ள சகல கடல்தொழில் அமைப்புகளையும் கலந்து கொள்ளும்படி தேசிய மீனவ ஒத்துழைப்புப் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

(21)

# உயிரிழந்த கல்விப் பணிப்பாளருக்கு கல்வி மேம்பாட்டுப் பேரவை இரங்கல்

நேற்றுமுன்தினம் வீதி விபத்தின்போது உயிரிழந்த தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.வேணுகோபால வாணிதாசனுக்கு - தமிழீழக் கல்விக்கழகம், தமிழீழ மாணவர் அமைப்பு ஆகியன இரங்கல் தெரிவித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு கோட்டக் கல்வி அதிகாரியாகவும், முல்லைத்தீவு, வடமராட்சி கல்வி வலயங்களின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும், தீவக வலயக் கல்விப் பணிப்பாளராகவும், யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவராகவும், தமிழீழ மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அயராது உழைத்து வந்த கல்விமான் - பொ.வேணுகோபால வாணிதாசனின் திடீர் மறைவையொட்டி அதிர்ச்சியும், ஆழ்ந்த வேதனையும் அடைகிறோம்.

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மருதடி அறநெறி பாடசாலையில் தீபாவளியன்று சிறப்பு நிகழ்வுகள்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பரிபாலன சபையால், ஞாயிறு தோறும் நடத்தப்படும் அறநெறிப் பாடசாலை ஆலய புனரமைப்புப் பணிகள் நடைபெறுவதையொட்டி, தற்காலிகமாக மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெற்று வருகிறது.

இங்கு தரம் 2 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

இவர்களுக்கான கலை, கலாசாரப் போட்டிகளும், பேச்சு, கட்டுரை, மாலை கட்டுதல், கோலம் போடுதல் போன்ற போட்டிகளும் தீபாவளித் தினத்துக்கு முன்னதாக நடைபெற்று, தேசிய விழாவாக இந்த முறை தீபாவளி விழாவை கொண்டாட இருப்பதாக, அறநெறிப் பாடசாலையின் செயற்பாட்டாளர் கா.கணேசதாசன் தெரிவித்தார். (101)

# மேஜர் தேசிகன் நினைவாக பஸ்தரிப்பு நிலையம்

வேலணை துறையூரைச் சேர்ந்த மாவீரர் மேஜர் தேசிகன் (நீதியாளர்) நினைவாக அவரது குடும்பத்தினரால் வேலணை துறையூரில் ஐயனார் சனசமூக நிலையத்துக்கு அருகாமையில் பஸ்தரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு இடம்பெற்ற இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வில் .- பஸ்தரிப்பு நிலையத்துக்கான அடிக்கல்லை தீவக மாவீரர் பணிமனை பொறுப்பாளர் கோமகன், வேலணை பிரதேச பொறுப்பாளர் யாழ்நம்பி, வேலணை கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் கார்த்திகேசு, வேலணை துறையூர் தேசிய எழுச்சிப் போவைச் செயலாளர் சுனஞ்செயன் ஆகியோர் நாட்டினர்.

# சாதாரணதர முன்னோடி பரீட்சை நவம்பர் 12 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் நடத்தப்படும், இந்த வருடம் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்கு தோற்றுவோருக்கான முன்னோடி பரீட்சைகள் - யாழ் மாவட்டத்தில் நவம்பர் 12 ஆம் திகதி ஆரம்பமாகி, நவம்பர் 23 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ள யாழ். மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் இதற்கான நேரசூசிகைகளை க.பொ.த (சா/த) பிரிவுகளைக் கொண்டுள்ள யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ளனர். (58)





நேற்று முன்தினம் நடைபெற்ற வேலணை துறையூர் மீன் சந்தைப் படுத்தும் நிலைய திறப்பு விழாவின்போது - மங்கள வாத்தியங்களுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், பிரதம விருந்தினர் நாடாவைவெட்டி நிலையக் கட்டடத்தைத் திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம். படங்கள்: தீபன்

# யு.எஸ். எயிட் திட்டத்தின்கீழ் சிறுவர் பாசறை நிகழ்வு

சர்வோதய நிறுவனத்தின் யு.எஸ். எயிட் திட்டத்தின் கீழ், ஐந்து கிராமங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கான சிறுவர் பாசறை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தில் நாளை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இழந்த கல்வியை மீளப் பெறல் என்ற நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் பயன்பெற்று வரும் ஊரெழு, மயிலங்காடு, காக்கைதீவு, கரம்பைக் குறிச்சி, மிருசுவில் ஆகிய கிராமங்களிலுள்ள இடைவிலகிய மாணவர்கள், மன அழுத்தங்களுக்கு உள்ளான பிள்ளைகள், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் என இனம் காணப்பட்ட சிறுவர்களுக்கே சிறுவர் பாசறை இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (91)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ். மாவட்டத்திலுள்ள அரச நியமனம் பெற்ற, முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை தொடர்பான கருத்தமர்வு -எதிர் வரும் 1 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 2.30 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

16 பிரதேச சபைகளில் கடமையாற்றி வரும் அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களுக்குமான இந்தக் கருத்தமர்வில் - உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஸ், சனசமூக நிலைய அபிவிருத்தி அலுவலர் வி.கந்தசாமி ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (91)

# முதலியாவெளி வயற்குளத்தில் நீராடும் பாடசாலை மாணவர்கள்

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு முதலியாவெளி வயற்பகுதியிலுள்ள முனிக் குளத்தில் - பாடசாலை மாணவர்கள் உட்பட, பல சிறுவர்கள் நண்பகல் வேளையில் மிகநீண்ட நேரமாக நீராடுவதாகத் தெரிய வருகிறது.

சேறு நிறைந்த இந்தக் குளத்து நீர் - மனிதர் குளிப்பதற்கு ஏற்றதல்ல எனவும், மிருகங்களை மட்டுமே இந்தக் குளத்தில் நீராட்டுவது வழக்கம் எனவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பாடசாலையிலிருந்து நேரடியாக இந்தக் குளத்துக்கு வரும் மாணவர்கள் - ஆடைகளைக் களைந்துவிட்டு, மிக நீண்டநேரம் நீராடிவிட்டு, பின்னர் அதே ஆடைகளை அணிந்துகொண்டு வீடு செல்வதாக - இந்த வயல் வெளியில் களை பிடுங்கும் பெண்கள் தெரிவித்தனர்.

துாய்மையற்ற, சேறுகள் நிறைந்த இந்தக் குளத்தில் நீராடுவது - நோய்த் தொற்றுக்கும், உயிராபத்துக்கும் வித்திடும் என்பது குறிப்பிடத்தக்கது. (24)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்



பெயர் : த.தனுஜன்
முகவரி : அச்சுவேலி.

ஒன்பதாவது அகவையில்



பெயர் : ஜோ.ஜெயப்பிரசன்
முகவரி : குருநகர்.





## சிநேகிதியே

# ஒவ்வொரு நொடிப்பொழுதும் நாம் எதிர்பார்ப்பது சந்தோஷமான வாழ்வையே!

வீடு, வாசல்களை அழகுபடுத்தும் விடயத்தில், இல்லத்தரசிகள் பெரும்பாலான நேரங்களைச் செலவிடுவதைக் காணமுடிகின்றது. உண்மையில் நாம் குடியிருக்கும் இல்லங்களும், அதன் சுற்றுப்புறங்களும் அழகுற இருந்தால்தான் மனமகிழ்ச்சி ஏற்படுகிறது. அதுபோல் அன்றைய நாட்பொழுதைக் குதூகலமான முறையில் கழிக்கவும் முடிகிறது. எனினும் இவற்றை மாத்திரம் சுத்தம் செய்வதால் மனமகிழ்ச்சியைக் கொண்ட நிறைவான வாழ்வைப் பெற்றுக்கொள்ள முடியுமா என்பது கேள்விக்குறியே...

ஒவ்வொரு நொடிப்பொழுதும் நம் எல்லோரது வேண்டுதலும், எதிர்பார்ப்புமானது, சந்தோஷமான வாழ்வேயாகும். இதற்கு நோயற்ற வாழ்வு பிரதானமானதாகும். எனவே சுகதேகிகளாக நாம் மாறுவது என்பது இல்லங்கள் அழகுற இருப்பதுடன், சுகாதாரமும் அதனுடன் சேர்ந்து சமநிலை அடையும் போதே. சிலருக்கு வீட்டினுள்ளும், அதை அண்டிய சுற்றுப்புறங்களிலும் சுகாதாரமற்ற நிலைஏற்படும் போதுதான் - நோய்கள் ஏற்படுகின்றன. இதனால் இவற்றை மாத்திரம் சுத்தப்படுத்துவதால், நோய்களுக்குரிய பரிகாரத்தை அடைந்து கொள்ளமுடியாது. நீங்கள் நினைத்துக்கூடப் பார்க்காத வழிகளினூடாக நோய்கள் உங்களைப் பீடிக்கும் சந்தர்ப்பங்கள் அதிகம் இருக்கின்றமையே இதற்கான காரணமாகும்.

ஏனெனில், சமூகக் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டு, அமைந்து காணப்படும் எம் அன்றாட வாழ்வில் கொடுக்கல், வாங்கல்கள் இடம் பெறுகின்றன. சொந்தங்கள், பந்தங்கள் என பலர் நம் வீடு நோக்கி வந்து செல்கின்றனர். இவையாவும் நம் மகிழ்ச்சிகரமான வாழ்வுக்கு பாரிய பங்கை வழங்குபவையாகும். எனினும் இவ்வாறு வந்து செல்பவர்களினது ஆரோக்கியம் குறித்து எமக்கு தெரிந்திருப்பதற்கு நியாயமில்லை. இவ்வாறான சந்தர்ப்பங்களில்தான் இல்லத்தரசிகள் மிகக் கவ



னமாக இருக்கவேண்டும். இன்று நம் வீடு வந்த ஒருவரால் - நாளை எங்களில் ஒருவர் நோயாளியாகலாம். எனவே உங்களது வீட்டுக்கு ஒருவர் வந்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் தங்கிவிட்டுச் சென்றுவிட்டார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த நபரிடம் பல்வேறுபட்ட நோய்கள் இருக்க வாய்ப்புண்டு. விசேடமாக பக்றீரியாக்களால் உண்டாகும் சொறி, சிரங்கு போன்ற தோல் நோய்கள் இருப்பின், பிறரை தொற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமுள்ளன. சிலவேளை இதைவிடப் பாரிய நோய்களால் பாதிக்கப்பட்டவராகவும் அவர் இருக்கலாம். இதனால் இல்லத்தரசிகள் அல்லது தாய் என்ற பொறுப்பைக் கொண்ட நீங்கள் சுகாதாரத்துக்குத் தீங்கு விளைவிக்கும் வெளிநோய்களின் அச்சுறுத்தல்களிலிருந்து உங்களையும், குடும்பத்தவர்களையும் பாதுகாத்துக் கொள்ளும் வழிமுறைகளை அறிந்து வைப்பது அவசியமாகும்.

இவ்வாறு உங்கள் வீட்டுக்கு எவராவது வந்து தங்கிவிட்டுப் போனால், அவர்கள் பாவித்த தலையணை உறை, துவாய் போர்வை போன்றவற்றை தோய்த்த பின் பாவிக்க வேண்டும். இரண்டு அல்லது மூன்று நாட்கள் தானே பாவித்தது அவற்றில் தூசி அல்லது அழுக்குகள் பட்டிருக்காது, அதனால் தோய்க்கத் தேவையில்லை என்று சோம்பல் கொள்கின்றவர்களும் நம்மில் பலர் உள்ளனர்.

உண்மையில் இவர்கள் பார்ப்பது உடம்பு அலுப்பையும், சவர்க்காரச் செலவையும்தான். இவ்வாறான செயல்களால் அல்லது அறிவின்மையால் செய்யும் காரியங்களால், உடலை வருத்தும் பாரிய நோய்கள் ஏற்பட்டு, பல ஆயிரம் ரூபா பணம் செலவழிக்க நேரிடும் என்பதையும் இவர்கள் உணரவேண்டும். மேலும் வருபவர்கள் உங்கள் வீட்டில் தங்க வேண்டும் என்ற நியதியும் கிடையாது. வந்துவிட்டு உடனே போனாலும் போதும். தோல் வியாதியால் பாதிக்கப்பட்ட ஒருவராக அவர் இருந்தால், அந்த நேரத்தில் அவர் பாவித்த பொருட்களிலும் கிருமிகள் தொற்றி இருக்கக்கூடும். இதனால் அவற்றை கிருமி நாசினி மூலம் சுத்தம் செய்யவேண்டும். வெளியிலிருந்து வருபவர்களைப் போலத்தான் வீட்டிலுள்ளவர்களும் பிறர் வீட்டுக்குச் சென்று வந்தால் முகம், கை, கால் கழுவிய பிறகுதான் வீட்டினுள் செல்லவேண்டும். இது தனது வீட்டைப்போல ஏனையோர்களது வீட்டிலும் சுகாதாரத்தைப் பேணும் செயலாகும். சப்பாத்து, சொக்ஸ் போன்றவற்றை அணிபவர்கள் வீட்டுக்கு வந்தவுடன் கழற்றி ஒரு மூலையில் அல்லது கட்டில்கள் போன்றவற்றின் கீழ் போட்டு விடுவதைக் காண முடிகிறது.

காலையிலிருந்து மாலைவரை இவற்றை அணிந்துகொண்டு இருப்பதால், உள்ளே வியர்வை உண்டாகி விஷக்கிருமிகள் தொற்றுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும். எனவே, இவற்றை அவ்வாறு கழற்றி வைக்காது, குளியலறையினுள் போடுவதே நல்லது. வேலைத்தலங்களுக்குச் சென்று வருபவர்கள் அல்லது பிரயாணங்களை முடித்துவிட்டு வீடு வருபவர்கள் அணிந்து வரும் காலணிகளுடன் உட்செல்லாது, அவற்றைக் கழற்றிவிட்டு கால்களைக் கழுவிய பின்னே உட்செல்ல வேண்டும்.

நாங்கள் இந்தப் பழக்கத்தையே பிறர் வீடுகளுக்கு சென்றாலும் கடைப்பிடிக்க வேண்டும்.

இது எங்கள் மீதுள்ள நட்பினூடான மனமகிழ்ச்சியை மேலும் அவர்களினுள் அதிகரிக்கச் செய்யும் வழிமுறைகளை அறிந்து கொண்டீர்களா? இனி என்ன, உங்கள் வாழ்வில் என்றும் வசந்தமே! ☆

# பருவத்தே பயிர் செய்



ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையாது என்பது அர்த்தமுள்ள ஒரு முதுமொழி. இளம் வயதில் கற்றுக்கொள்கின்ற சில பழக்கவழக்கங்கள் பசுமரத்தாணி போல மனதில் ஆழமாகப் பதியக்கூடி யவை. அந்தப் பருவத்தில் மனதில் பதிகின்ற சில விரும்பத்தகாத விட யங்கள் கூட, ஆழமாகப் பதிந்து விடுகின்றன.

மாணவ, மாணவியர் படிக்கின்ற பருவத்திலே பல தரப்பட்ட உணர்வுகளுக்கும், அனுபவங் களுக்கும் உள்ளாகிறார்கள். அத்தகைய சந்தர்ப்பங்களில், தேவையான பல நல்ல விடயங்களைத் தெரிந்துகொள்ளும் சமயத்தில், தேவையற்ற சில விடயங்களையும் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் உருவாகிறது.

### பருவத்தே பயிர் செய்ய வேண்டிய சில விடயங்கள் எவையெனப் பார்ப்போமானால்

அன்பு செலுத்துவது என்பது மிக உயரிய, உன்னதமான ஒரு குண இயல்பு. உருக்கமானதும் கூட. அன்பாகப் பழகுகிறோமோ, இல்லையோ, அன்பாகவாவது பேசமுற்பட வேண்டும். அதே சமயம், அன்பின் அடிப்படையில் நம்மை யாரும் அடிமையாக்கி விடாமலும் பார்த்துக் கொண்டாக வேண்டும். அன்புக்கு அடுத்த படியாக இரக்ககுணமும், பருவத்தே பயிர் செய்யப்பட வேண்டிய ஒரு பயிர்.

ஆனால், அதுகூட அளவுக்கு மேல் போகும்போது, ஆபத்தாகிவிடுகிறது. 'ஆற்றில் போட்டாலும் அளந்து போடு' என்று ஒரு பழமொழி கூட உண்டு. அதிகமாக இரக்கப்பட்டு ஏமாந்தவர்கள் பலர் உண்டு. பணிவு என்பதும் ஒரு முக்கியமான ஒரு குணவியல்பு. அதுவே கோழைத்தனமாக மாறிவிடலாகாது. இதற்காகக் *குனியக் குனியக் குட்டும்* நிலையை உருவாக்கிக் கொள்ளக்கூடாது.

சிக்கனம் என்பது சீரியதோர் குணஇயல்பு. ஆனால், அதுவே கஞ்சத்தனமாக மாறிவிடக் கூடாது. சிக்கனமாக இருக்கலாம். ஆனால், கஞ்சத்தனமாக இருக்கக் கூடாது.

கடமை உணர்வு முக்கியம். அதனுடன் கண்டிப்பும் தேவை. ஆனால், கடுங்கோபம் காரியத்தையே கெடுத்துவிடும்.

வீரம் என்பது தேவை. ஆனால், விவேகமற்ற வீரம் ஊறுவிளைவித்து விடும். மனவுறுதியையும், துணிவையும், அடுத்தவர்களை அச்சுறுத்துவதற்குப் பயன்படுத்தக்கூடாது. அதிகாரதோரணையும், ஆணவமும் அழிவையே தரும். சுறுசுறுப்பு என்பது அத்தியாவசியமான ஒரு குணஇயல்பு. ஆனால் பதற்றத்தோடு அலைந்து கொண்டிக்கலாகாது. பதறிய காரியம் சிதறித் தான் போய்விடும். பதற்றத்தோடு பணிசெய்ய முற்படும்போது மனோநிலை, உடல்நிலை, செயல்நிலை ஆகிய அனைத்துமே பாதிப்புள்ளாகிறது.

தர்மம் உயரியதோர் நற்பண்பு. நல்ல பெயரை நிச்சயம் வாங்கித் தரும். ஆனால், அதையே செய்து கொண்டிருந்தால், ஆண்டியாகிவிட வேண்டியது தான்.

பொருளை ஈட்டுதல் பக்குவமாகப் பழகிக் கொள்ளவேண்டிய ஒரு குண இயல்பு. ஆனால், பணப்பித்து பிடித்து விடக்கூடாது. அது பேராசையாக மாறிவிடும்.

கடமையைக் கண்ணாகக் கருதுதல் அத்தியாவசியமானதாகும். ஆனால், கடவுள் நம்பிக்கையும், வழிபாடும் மறந்து விடமுடியாத பண்புகள்.

மந்திரத்தால் மாங்காய் விழுமா? எனக் கேட்பவர்களும் உண்டு. பரீட்சைக்குப் போகின்ற மாணவர்கள் கடவுளை மட்டுமே நம்பி பரீட்சை எழுத முடியாது. நன்றாகப் படிக்கவும், உழைக்கவும் கடவுளைக் கும்பிடவேண்டும். அப்போதுதான் கடவுளும் அருள் வழங்க முன்வருவார். இது மதவாதமன்று. மனிதவாதம். படிக்கின்ற பருவத்திலே பண்பட்டு உயர இந்த மாதிரி வித்துக்களைப் பயிரிட்டால், நிச்சயம் பின்னாளில் பெரிய அளவில் பலன் கிடைக்கும். ☆

# ஆரோக்கியமான குழந்தைக்கு

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*



**☆ நஞ்சு கொடி சம்பந்தமான பிரச்சினைகள்**

நஞ்சு கொடி தகுந்தவாறு அமையாமல் இருத்தல் போலவே செயற்படாமல் இருப்பதாலும், மற்றும் கடுமையான நிலை காரணத்தாலும் வளர்ச்சியற்ற குழந்தை உருவாகலாம்.

தாய்க்கும், கர்ப்பப்பைக்கும் ஏற்படக்கூடிய தாக்குதல், அவசர பாதிப்புக்கள் போன்றன வளர்ச்சியற்ற குழந்தைகளின் பிறப்புக்குக் காரணமாகின்றன.

**☆ வளர்ச்சி குறைவதால் ஏற்படும் பாதிப்புக்கள்**

இங்கு ஏற்படும் பல பாதிப்புக்கள் உடலில் உறுப்புக்கள் தகுந்தவாறு செயற்படாத காரணத்தால் பாதிப்பு ஏற்படும்.

**1) சுவாசப்பை சம்பந்தமான நோய்கள்**

நுரையீரல் செயற்பாட்டுக்குத் தேவையான போஷாக்குகள் குறைவதால் குழந்தை சுவாசிப்பதற்குக் சிரமப்படுவதோடு, இதனால் மரணமும் ஏற்பட வாய்ப்பாகிறது.

**2) நோய்கள் ஏற்படும் நிலை**

வளர்ச்சியற்ற குழந்தைகளின் உடலில் கிருமிகளை எதிர்க்கும் சக்தி குறைவாகும். அதனால், வெவ்வேறு பயங்கரமான நோய்களுக்குச் சுலபமாக ஆளாகுவதற்கு வாய்ப்பாகிறது.

**3) வளர்ச்சியற்ற குழந்தையால் ஏற்படும் கஷ்டங்கள்**

வளர்ச்சியடையாத காரணத்தால் பல குழந்கைகளுக்கு பால் உறிஞ்சிக் குடிக்க முடியாமல் போவதோடு, வேறு முறைகளால் அதை வழங்கினாலும்கூட, உடலுக்குள் அதை உறிஞ்சிக் கொள்ளக் கஷ்டப்படுகிறது. அவ்வாறான குழந்தைகளுக்குத் தகுந்த நிலைவரும் வரை குளுக்கோஸ், சேலைன் போன்றவற்றைக் கொடுக்கலாம்.

**4) சிறுநீரகத்தால் ஏற்படும் பாதிப்பு**

சிறுநீரகம் தகுந்தவாறு செயற்படாத காரணத்தால், உடலில் அடங்கியுள்ள சோடியம், கல்சியம், பொட்டாசியம் போன்றவை சமநிலை இல்லாமல் போவதால், ஒரு சில மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**5) இருதயமும், இரத்தமும் தகுந்தவாறு செயற்படாத காரணத்தால், இருதயம் சம்பந்தமான நோய்கள், இரத்தக் குறைபாடு என்பன தோன்றுவதுடன், மூளை போன்ற உறுப்புக்களிலிருந்து இரத்தம் வெளியேற இடமுண்டு.**

**6) வளர்ச்சியற்ற தன்மையைப் போலவே, அதிகளவு ஒட்சிசன் வழங்குவதால், குழந்தையின் கண்ணில் பாதிப்பு ஏற்படலாம். இதனால் கண் பார்வையை இழக்கவும் இடமுண்டு**

**7) உடலில் மஞ்சள் நிறம் அதிகமாதல், குழந்தையின் இரத்த வகைகள் அழியும் போது ஏற்படும் ஒருவகைத் திரவம் உடலுக்குள் சேருவதால் மூளைக்குப் பாதிப்பு ஏற்படலாம்.**

இந்த நிலை முற்றாகத் தோன்றினால், குழந்தையின் உடலில் இருக்கும் நீரின் அளவு ஆவியாக வெளியேறுவதால் பல நோய்கள் ஏற்படும். இந்த நிலையால் உடலின் வெப்பத்தைத் தடுப்பது மிகவும் கஷ்டமாக இருக்கும்.

வளர்ச்சியடையாத குழந்தைகளின் பிறப்புக்களைத் தடுப்பதற்கு சாதகமான காரணங்களை சரியாக இனங்கண்டு, செயற்படுவதால் இவ்வாறான பிறப்புக்கள் ஏற்படுவதைத் தடுக்கலாம்.☆

சன நூலகம்
யாழ்ப்பாணம்

# நிறுவன மயப்படுத்தப்பட்ட சிறார்களும், எதிர்காலமும்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**ஒழுக்கம் பேணல்**

பெற்றோருடன் வாழும் சிறுவர்களைவிட, காப்பகங்களில் வாழும் சிறுவர்கள் ஒழுக்கம் பேணப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உண்டு. இதனால், முகாமையாளர் சிறார்களின் ஒழுக்கம் பேணல் என்ற நிலையில் மிகவும் இறுக்கமாகத் தொழிற்படும் நிலையும் உண்டு. சிறார்கள் இந்தநிலையில் பெற்றோரோடு வாழும் சிறுவர்களையும், தங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் நிலைக்கு ஆளாகின்றனர். இந்த ஒப்பீடு, அவர்களுக்கு உளவியல் தாக்கத்தையும் ஏற்படுத்தும். ஆனால் காப்பகச் சிறாரின் எதிர்கால வளமான வாழ்வுக்கு ஒழுக்கப் பயிற்சி இன்றியமையாதது. கூட்டு வாழ்க்கையில் பேணவேண்டிய ஒழுங்குமுறைகளை நாளாந்தப்பயிற்சி மூலம் சிறார்கள் பெற்றுக் கொள்ளலாம்.

ஆணும் - பெண்ணும் என்ற நிலையில் சிறாரைத் தனிமைப்படுத்த வேண்டியது எமது பண்பாட்டு மரபில் அடங்குவது. மேலைத் தேசங்களில் சிறாரைத் தனிமைப்படுத்த வேண்டியதில்லை என்ற கருத்து வலுப்பெற்றுள்ளது. எமது நாட்டிலே பால்பாகுபாடு பண்பாட்டின் அடித்தளமாக அமைக்கப்பட்டுள்ளது. புனித குடும்ப வாழ்க்கைக்கு ஒழுக்கவரையறை கட்டாயமானது. பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் வல்லுறவு, கற்பழிப்பு போன்ற சட்ட மீறல்களைத் தடுப்பதற்கு, சிறாருக்கு ஒழுக்கம் பற்றிய அறிவு அவசியமானது. பருவத்துக்கேற்ற உணர்வு நிலைகளின் மாற்றங்களை அறியாத சிறார்களும் உள்ளனர். வறுமை காரணமாக ஒழுக்கம் பேணப்படாத



மரபு ஒன்று தோன்றியுள்ளது. தலைமைத்துவப் பயிற்சியில் பால்பாகுபாடு நடைமுறைப் படுத்துவது தவறு என, மேலைத்தேயத்தவர் தற்போது கருதுகின்றனர். குடும்பம் என்ற அமைப்பில் ஆணும் - பெண்ணும் கணவன்-மனைவி என்ற தகுதியுடன் இல்லறம் பேணுவர். சிறார் காணும் - தாயும், தந்தையும் இத்தகையதொரு இனிய உறவில் இணைந்தவர் என்பதை நன்கு அறிவர். எமது கல்வி மரபும் இந்த உறவைத் தெளிவாகவே விளக்கியுள்ளது. இதைச் சிறுவர் காப்பகங்களும், சிறாருக்கு உரிய முறையில் விளக்கவேண்டும். ஆனால் இந்த உறவுநிலை பற்றிய கற்பித்தல் இல்லாவிட்டால், சிறார்கள் தவறான நடத்தையில் வழிதவற நேரிடும்.

இல்லக் காப்பகப் பணியாளர்களிடையே ஒழுக்கச் சீர்கேடு இருப்பின், சிறார் ஒழுக்கம் பற்றிய தவறான கருத்தைப் பெறுவர். சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வல்லுறவு போன்ற நிலைகளுக்கு ஆளாக நேரிடும்போது, அதிலிருந்து மீளவேண்டியுள்ளது. எனவே முகாமையாளர் சிறாருக்கும், பணியாளருக்கும் இடையேயுள்ள உறவு தூய்மையானதாக இருக்க ஆவன செய்யவேண்டும். சிறாரின் உள்ளத்தில் 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்' என்பது ஆழமாகப் பதியக்கூடிய செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

**பிற சவால்கள்**

சிறாரின் உள்ளத்தில் சேவை உணர்வை வலுப்படுத்த வேண்டிச் சிலசெயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தன்னலம் கருதாது, பிறருக்கு உதவி செய்யும் பண்பு நலனை அவர்களிடம் வளர்த்துவிட வேண்டும். துன்பத்தில் ஒருவருக்கு உதவும் மனப்பாங்கு இன்று பலரிடம் அகன்று விட்டது. எனவே, சிறுவரை நல்ல முறையிலே வளர்த்தெடுக்கும் பொறுப்பை ஏற்றுள்ள சிறுவர் இல்ல முகாமையாளர்கள், இந்தவிடயத்தில் தனியான கவனம் எடுத்துச் செயற்படவேண்டியுள்ளது.

பரிவையும், பாசத்தையும் இழந்த சிறுவர்கள் ஏனையவர் மீது அவற்றைச் செலுத்தி வாழும் பயிற்சியைப் பெறின் உளநலம் பெறுவர். நட்பு நிலையிலே பிறருடன் இணையும்போது, அவர்கள் உள்ளத்தில் ஏற்பட்டிருக்கும் வடுக்கள் மாறிவிடும். சோகச்சுமைகளை நட்பாளருடன் பகிர்ந்து கொள்ளும் பக்குவத்தையும் அதுநல்கும்.

சிறார் தம்மிடையே ஏற்படும் முரண்பாடுகளையும், சிக்கல்களையும் தீர்ப்பதற்கு சிறுவர் பராமரிப்பு முகாமையாளர்கள் மூலம் ஏற்ற வழி நடத்தல்களைப் பெறவேண்டும். அது அவர்களுடைய எதிர்கால வாழ்க்கைக்கும் உதவும். இன்னும் குறிப்பாக சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் வாழ்ந்தோர் என்ற நிலையில், எதிர்காலத்தில் சில சிக்கல்களை எதிர்கொள்ளநேரிடும். அப்போது அவர்கள் அவற்றை வென்று, இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். தூய்மையும், பொறுமையும் பேணும் நிலை அவர்களிடம் நிலைத்திருக்கவேண்டும். மனித வாழ்வுக்கு இந்த இரு குணநலமும் இன்றியமையாதன. சிறார்கள் தம்மைப் பலப்படுத்திக்கொள்வதற்குத் துணைநிற்பவை.

இன்னொரு புதியசவால் இன்றைய சிறாருக்குண்டு. அதுவே பண்பாடு பேணி நடத்தலாகும். முதியவர் பலர் பண்பாடு பேணலைக் கைவிட்டிருக்கும் இந்தவேளையில், எமது பண்பாட்டின் எதிர்காலத்துக் காவலர்களாகச் சிறுவர்களே உருவாக வேண்டும். தாம் வாழும் நாட்டைப் பிரதி நிதித்துவப் படுத்தி, இனத்தை அடையாளம் காட்டி நிறக வேண்டும். மரபான, அமைதியான, முரண்பாடற்ற, சமநிலையான வாழ்வியல் நடக்க எமது முன்னோர் வரையறை செய்துள்ள பண்பாட்டம்சங்கள் பல உண்டு. அவற்றை மேற்கொண்டு இன்று எமக்கு எதிரியாக எம்மைத் தம் வலையில் வீழ்த்தவெனக் கங்கணம் கட்டிநிற்கும் பிற பண்பாட்டம்சங்களைக் களைவதே சிறாரகள் எதிர்கொள்ளும் மிகப் பெரிய சவாலாகும். அதை அவர்கள் வெல்வதற்கு ஏற்ற பயிற்சியை அளிக்கும் பண்பாட்டுக்களமாகவே, சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் பணி அமையவேண்டும். அதுவே ஒரு நாட்டில் நிலையான அமைதியையும், இயல்பான வாழ்வியலையும் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. ☆

**மனோன்மணி சண்முகதாஸ்**

# ஆசை



ஆசை என்பது ஆண்களிடம் குறைவாக இருக்கிறது, பெண்களிடம் கூடுதலாக இருக்கிறது என்றில்லை. ஆசை இருபாலாருக்கும் இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான ஆசைகள் இருக்கிறது.

பெண்களின் ஆசை, நாளுக்கு நாள் ஒவ்வொரு விதமான புடவை உடுக்கவேண்டும், நிறைய நகைகள் அணிய வேண்டும், அழகாக இருக்க வேண்டும், பிறர் தன்னைப் பார்க்க வேண்டுமென்று இப்படியாகப் பெண்களின் ஆசை மாறுபடும்.

ஆண்களின் ஆசை அப்படியல்ல. நல்ல தொழில் பார்க்க வேண்டும், நிறையச் சம்பாதிக்க வேண்டும், குடும்பத்தினரைப் பார்க்க வேண்டும், சுற்றித்திரிய வேண்டும் என்று ஆசைகள் வேறுபடும். இப்படியாக ஆசைகள் ஆண்களிடமும், பெண்களிட மும் நிறையவே இருக்கின்றன. இவையெல்லாம் ஆசைகள் தான். ஆனால், மரத்தடியில் ஒரு துண்டை விரித்து உறங்கும் நாளாநதத் தொழிலாளியின் ஆசை. இது வரைக்கும் பழஞ்சோற்றுடன் தயிர் விட்டு, ஊறுகாயுடன் சாப்பிட ஆசை, மாதாந்தம் உறவினர் வீடுகளுக்குச் சென்று வர ஆசை இப்படியாக ஆசைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இவை அனைத்தும் நிறை வேறுமா என்று பார்த்தால், ஒருவருக்கும் முழுவதுமாக ஆசை தீர்ந்தபாடாக இல்லை.

இதற்கிடையில் தான் - வாழ்வு நம்பிக்கையுடன் நகருகிறது. மனிதர்களின் வாழ்வு, மாற்றம் ஆசை என்ற ஒன்றுக்குள் தான் அலங்கரிக்கப்படுகிறது. குறைந்தளவில் மட்டும்தான் எம்மை நிலையாக, அமைதியாக, வாழ்வு முழுவதுமாக அடையக்கூடிய பக்குவம் ஏற்படுகிறது. அதற்கும் கூடுதலாக எதனையும் பெற நினைத்தல் ஆசை என்ற காரணத்தால் தான் ஆகும். பிடிக்காதபோது அதை ஒதுக்கி வைக்கின்றோம். ஒருவருக்குப் பிடிக்காத தொன்று இன்னொருவருக்குப் பிடிக்கின்றபோது, எதனையும் பிடிக்காது என்று சொல்லிவிட முடியாது. ஆகவே, எதனையும் எடுக்கின்ற விதத்தில் தான் பிடிக்கும், பிடிக்காது என்பது அடங்குகிறது.

திருமணத்தின்போது பெண்ணுக்கு, மாப்பிள்ளை பிடிக்காது, திருமணம் தடைப்படும் அதேபோல, மாப்பிள்ளைக்குப் பெண்ணைப் பிடிக்காமல் திருமணம் தடைப்படும். பெண் அழகில்லை என்று ஒதுக்கும் ஆண், ஆண் தொழில் இல்லை என்று ஒதுக்கும் பெண், இவர்களுக்குள் இதைவிட வேறு புதிதாகவுள்ளதா, இல்லையா என்று பார்ப்பதில்லை. ஆகவே பிடிக்கும், பிடிக்காத மனதளவில் ஆசை என்ற ஒன்றின்மூலம்தான் நடைபெறுகிறது.

நன்மையோ, தீமையோ ஆசைக்குள் அடங்குகிறது. எந்த விடயத்திலும் தம்மை விட்டுக் கொடுக்க மாட்டார்கள். அந்த விடயம் பிழையாக இருந்தாலும், சரியாக இருந்தாலும் வாதிடும் மட்டும், தன்னை மறக்கும் மனம் எல்லோரிடமும் இருக்கிறது.

இன்றைய சமூகம் எப்படிப்பட்டது. சொல்ல முடியாத அளவில் இருக்கிறது. அன்றாடம் ஆண்களும், பெண்களும் சேர்ந்து ஓடுகிறார் கள் அவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றதா? என்றால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். வெளிநாட்டு மோகம் ஒரு பக்கம், இதற்கிடையில் கட்டியெடுக்கப்படும் சமூகம் நிலைக்குமா? அல்லது பழைய வாத சமூகக் கோட்பாட்டை யும் இழக்குமா? என்று தான் தெரியவில்லை. நவீனத்துவம், பழமை என்றபோது ஆசை என்று தான் முடிவாகக் கொள்ளலாம்.

இன்றைய சமூகம், நாளைய சமூகம் இதற்கிடையில் வாழ்வு எப்படியெல்லாம் மாறுபடுகின்றது. எங்கே சென்று, எது செய்தாலும் திருப்பி வந்து, ஆறுதலடைய ஒரு வீடு இருப்பதுபோல் எந்தப் பிரச்சினை என்றாலும் ஆதங்கப்பட்டாமல், சமாளித்து நிதானப்படும் பக்குவத்துக்குத் எமது மனத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும். மனம் ஆசையால் தள்ளப்படும்போது, வாழ்வு எப்படியெல்லாம் மாறுபடுகின்றது என்று கண்ணூடே நாம் பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

எந்த இலக்கை அடையப் போகிறோம், அந்த இலக்கு எமக்கு நன்மையாகவும், பிறருக்குத் தீமையில்லாதவாறும், வாழ்வுக்குப் பயனாகவும் இருக்க வேண்டும். மீண்டும் புதிய வாழ்வில் தன்னை முழுமையாக ஈடுபடுதத்தி, ஒன்றுமே நிறைவேறாமல் அதைக் குறையாக விட்டுவிட்டு, புதிதாகவொன்று செய்வதற்கு முயற்சிக்கும் மனம் நிறையப் பேரின் கருத்துக்களை கேட்டு ஈடுபடவும் முடியாமல், நிறுத்தவும் முடியாமல், தத்தளிக்கும்போது யாரைக் குறை கூறுவது? தாங்களாகவே வாங்கிக் கொண்ட பழியாகும். ஆகவே, பிறர் பேச்சில் பலதரப்பட்ட கருத்துக்கள் இருக்கலாம். அதில் தெளிவான விடையைப் பெறக்கூடிய மனம் எல்லோரிடமும் இருக்கவேண்டும்.

இப்படிப்பட்ட வாழ்வில் தான் நிறையப் பிரச்சினைகள் வருவதற்கு இடமுண்டு. குடும்பம் என்றால் பிரச்சினைகள் ஏற்படுவது வழக்கம். அந்தப் பிரசசினைகள் அன்றன்றே தீர்த்து விட வேண்டும். பிறர் இதில் பங்கேற்பவிடக் கூடாது. பக்கத்து வீட்டில் உள்ளோர் எப்படியும் இருக்கலாம். உங்களுடன் பழகுபவர்கள் எப்படியானவர்களாகவும் இருக்கலாம். நீங்கள் பழகும் முறையில் உங்களிடம் நிறையப் பேர் பழக வருவார்கள். அவர்கள் எல்லோரும் ஒரே விதமான மனங்களையும், ஒரே விதமான ஆசைகளையும் கொண்டவர்கள் அல்ல. ஆகவே பிறருக்குப் பிடிக்கும் அனைத்தையும் நாமும் பிடிக்கப் பழகிக்கொண்டால், கண்டிப்பாக எட்டிப் பிடிப்பம் வாழ்வில்

# வாழ்க்கையின் அருமை

**வா**ழ்க்கை என்பது அருமை. அருமையில்லாத வாழ்வு அற்பமானது, அர்த்தமற்றது, ஆழமற்றது. இந்த அருமையில் தான் கணவன் - மனைவி இருவருக்கிடையே புரிதலம், நேசமும் இது இட்டுமன்றி இவற்றுக்கும் அப்பாற்பட்ட ஏதோ ஒன்றை வாழ்க்கை கொண்டிருக்கின்றது.

நாம் நம்மில் பல தம்பதிகளைப் பார்க்கிறோம். அவர்களில் சிலர் பார்ப்பவர்களுக்க அழகாகவும், நேசமுடையவராகவும் இருக்கின்றார்கள். இன்னும் சிலரின் முகங்களில் சந்தோஷக் களையையே காணமுடியாதவாறு சலிப்படைந்தவர்களாக இருக்கிறார்கள். இதில் வியப்பதற்கு என்ன இருக்கிறது. சில தம்பதிகள் தன்னையே மையமாக்கொண்டு சுயநலவாதிகளாக இருக்கிறார்கள். இதுவும் ஒரு வாழ்க்கைதான். சில கணவன் மனைவிக்கு இடையே உடல் ரீதியான உறவுகள் இருந்தாலும் மனரீதியான எந்தத் தொடர்பும் அற்றதாக இருக்கும்.

எடுத்ததற்கெல்லாம் சந்தேகப்படுகின்ற ஒரு கணவனிடம், மனைவிக்கு எப்படி இணக்கமான உறவு வரும்...? அதேபோலதான் செய்வதேசரி என்று சாதிக்கும் ஒரு கணவரோடு, ஒரு மனைவிக்கு எப்படி இணக்கம் வரும். மாறாக எடுத்ததற்கெல்லாம் கோபப்படும் ஒரு மனைவியுடன், கணவனுக்கு எப்படி அன்புவரும். இருவருமே சித்தப்பிரமை பிடித்த தம்பதிகளாகவாழும்போது வீட்டுக்குள் மகிழ்ச்சியைக் காண்பது அரிது.

உண்மையான புருஷன் - மனைவி இணக்கத்தில் துன்பம், துயரம், தோல்விகள், இலாபம், நட்டம், சோகம் இவைகள் ஒட்டுமொத்தமாகப் பரிமாறப்படல் வேண்டும். ஒருவர் பற்றி ஒருவர் புரிந்து கொள்ளவேண்டும். அது தான் உண்மையான வாழ்க்கை.

அன்புக்கு என்றும் வயதாவதில்லை. சில தம்பதிகள் வயதான போதும்கூட ஒருவரில் ஒருவர் கரைந்து விடுகிறார்கள். இன்னும் சிலரோ நாம் இத்தனை காலம் வாழ்ந்தும், இன்னும் சந்தோஷமாக வாழவே இல்லை என்று அங்க லாய்க்கிறார்கள். எத்தனை வருடங்கள் வாழ்ந்த போதும், ஆவல், கோபம், ஏமாற்றம், சந்தேகம், உடைமைத்தனம், போட்டி இவைகள் இருக்கும் வாழ்க்கையில் உயிர் உள்ள வரை நிம்மதி இருக்காது.

வாழ்வை மனிதன் ரசிக்க வேண்டும். அதை ருசிக்க வேண்டும். இரண்டும் இல்லாத விடத்தில் அதை மதிக்கவாவது வேண்டும். தானும் வாழ்ந்து மற்றவர்,களையும் கலக்கமின்றி வாழவைக்க வேண்டும் இதுதான் வாழ்க்கை மற்றவையாவும் மாயை.

மரத்தின் வளர்ச்சி அழகானது- அதன் அழகு தென்பதுவது பக்கத்தில் செழிப்பான மரங்கள் காட்சியளிப்பதால்தான். அதேபோன்று மனிதனின் வளர்ச்சி அழகாக இருக்கும். உறவுகள் பக்கத்தில் இருக்கும் வரைதான்.

வயதான போதும்கூட சில விவாகரத்துக்குள் சமூகத்தில் தலைவிரித்தாடுவது வியக்கத்தக்க விடயமல்ல. வயதானாலும்கூட கணவன் - மனைவிக்கு இடையே பற்றுதல் ஏற்படவில்லை என்பது தான் இதற்குக் காரணம்.

வாழ்க்கை இன்பமாக அமையவேண்டுமென்றால், கணவன் - மனைவி இருவரின் மனதிலும் நாம் ஒருவர் என்கின்ற எண்ணம் இருக்க வேண்டும். அந்த புனிதமே குடும்ப வாழ்வை இன்பமாக்கும் ஆணிவேர் ஆகும். ★



## சின்னஞ்சிறு செய்திகள்

### குன்றும் குழியுமாகக் காணப்படும் வீதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - பெரு முறிகண்டியில் இருந்து வன்னேரிக்குளம் செல்லும் வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

இந்த வீதியில் உள்ள 3 மதகுகள் மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில், மழைநீர் தேங்கிக் காணப்படுகிறது.

இதனால் இந்தப் பாதையூடாகப் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை காணப்படுகிறது.

### கழிவு வாய்க்கால் இன்றி சிரமம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி - குமுழமுனைக் கிராம விவசாயிகள், தமது நெற் செய்கை நிலங்களில் கழிவுநீர் வாய்க்கால் இன்றி பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தமது நெற்செய்கை நிலங்களுக்கு கழிவு நீர் வாய்க்கால்களை அமைத்துத் தரும்படி பூநகரிப் பிரதேச செயலகத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதும், இதுவரை கழிவு நீர் வாய்க்கால் அமைப்பதற்கான பணிகள் இன்னமும் முன்னெடுக்கப்படவில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

### பூநகரி செல்லும் பயணிகளுக்கு சிறப்பு பஸ் விடுமாறு கோரிக்கை

கிளிநொச்சியில் இருந்து பூநகரி செல்லும் அரச, அரசசார்பற்ற ஊழியர்கள் - மாலையில் பூநகரியிலிருந்து கிளிநொச்சி வரையான சிறப்பு பஸ் சேவை ஒன்றை நடத்துமாறு பூநகரிப் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சியிலிருந்து பூநகரிக்கு செல்லும் பணியாளர்கள் மாலையில் பணி முடிந்து, உரிய நேரத்துக்கு தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவுவதே பொருண்மிய மதியுரையகத்தின் முதன்மைப் பணி

## அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவிப்பு

போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதே பொருண்மிய மதியுரையத்தின் முதன்மையான பணி என, தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் தெரிவித்தார்.

மன்னார் ஆண்டான் குளத்தில் தமிழீழ பொருண்மிய மதியுரையக அலுவலகத் திறப்பு விழாவும், மரநடுகைத் திட்டமும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மன்னார் மாவட்ட மாணவர்கள் கடந்தகாலப் போரால் கல்வித்தரத்தில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மதியுரையகம் அர்ப்பணிப்புடன் செயற்படும்.

தொழில் நுட்ப அறிவைப் பெற்றுக்கொள்ளவேண்டிய தேவை எமது மாணவ சமூகத்துக்கு இன்று உள்ளது.

இந்த மாவட்டத்தில் தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றை அமைக்கும் பணி இடம்பெற்று வருகிறது.

எதிர்வரும் தை மாதத்தில் இந்தப்பணி முடிவடையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றிவைத்தார். அலுவலகப் பெயர்ப்பலகையை ஜெய்க்கா நிறுவனப் பிரதிநிதி தைசோ திரைநீக்கம் செய்து வைத்தார்.

மதியுரையக அலுவலகத்தை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட வெளிக்கள உத்தியோகத்தர் முரளிதரன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

தொடர்ந்து மரநடுகை நிகழ்வு இடம்பெற்றது. தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மதியுரையக இணைப்பாளர் கி.பிரபாகரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிறுவனத்துக்கு சூரிய மின்கலம் ஒன்று வழங்கப்பட்டது.

இதை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் வழங்க, மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வின் கருத்துரைகளை தமிழீழ அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், ஜெய்க்கா நிறுவனப் பிரதிநிதி தைசோ, ஐக்கிய நாடுகள் திட்ட வெளிக்கள உத்தியோகத்தர் முரளிதரன், மன்னார் மாவட்ட அரச சார்பற்ற இணையங்களின் தலைவர் மரியநாயகம் குரூஸ் உட்படப் பலரும் நிகழ்த்தினர்.




### 49 ஆவது ஆண்டு நிறைவு விழா

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் 49 ஆவது நிறைவு நிகழ்வுகள் - தமிழர் தாயகப் பகுதி எங்கும் கடந்த திங்கட்கிழமை விமரிசையாகக் கொண்டாடப்பட்டன.

இதையொட்டி கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இது தொடர்பான கண்காட்சி நிகழ்வும், இடம் பெற்றது.

இந்தக் கண்காட்சியில் ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிட்ட சிறு சஞ்சிகைகள் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன.

## கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 280 மில்லியன் உதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை புனரமைப்புக்கென, ஆசிய அபிவிருத்தி வங்கி 250 மில்லியன் ரூபா வழங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிதியுதவி நீண்டகால இடைவெளிக்குப் பின்னர், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குக் கிடைத்துள்ளது.

1996 ஆம் ஆண்டு இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட சத்ஜெய படை நடவடிக்கையின் போது, இந்த வைத்தியசாலை முற்றாக அழிக்கப்பட்டன.

இந்த வைத்தியசாலைக்கென புதிய கட்டடப் பணிகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### கிணறுகள் புனரமைப்பு

மன்னார் - பள்ளமடு குளக்கட்டுப் பகுதியில் இரண்டு பொதுக் கிணறுகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

மன்னார் - இலுப்பைக்கடவை அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினர், இந்தக் கிணறுகளைப் புனரமைக்கும் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, மன்னார் மடு, மாந்தை உதவி அரச அதிபர் பிரிவில், பல பொதுக்கிணறுகள் இதுவரை புனரமைக்கப்படாதுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'நாற்று' சஞ்சிகை வெளிவந்துள்ளது

தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனத்தின் வெளியீடான 'நாற்று' வெள்ளி இதழ் வெளிவந்துள்ளது.

தமிழீழ மகளிர் அரசியற்துறைப்பொறுப்பாளர் தமிழினியின் வாழ்த்துரையும், தமிழவள் எழுதிய நாற்றின் 'உதயம் நோக்கி' என்னும் கட்டுரையும், ஆதிலட்சுமி சிவகுமார் எழுதிய 'துயரம் சுமக்கும் பெண்கள்' என்னும் கட்டுரையும், கருணாகரன் எழுதிய 'ஊடகங்களில் பெண் - பெண்களில் ஊடகங்கள்' என்னும் கட்டுரையும், செம்பருதி எழுதிய 'பனிச்சமரம் பழுத்திருக்கு' என்னும் சிறுகதையும், தமயந்தி எழுதிய 'சட்டம் என்ன சொல்கிறது' என்ற ஆக்கமும், செல்வா அம்பிகை நடராசா எழுதிய 'தமிழர் வாழ்வியலில் பெண்மை' என்னும் கட்டுரையும் இளம் ஓவியர் மதுமதியின் நேர்காணல், மனோன்மணி சண்முகதாஸின் கட்டுரையும், பொ.நந்தினியின் சிறுகதை எனப் பல ஆக்கங்களைத் தாங்கி, இந்த இதழ் வெளிவந்துள்ளது.



கிளிநொச்சிலிருந்து திருவையாறு, வட்டக்கச்சி பிரதேசங்களுக்குச் செல்லும் பிரதான வீதியிலுள்ள இரத்தினபுரம் பாலம் புனரமைப்பு செய்யப்படுவதைப் படத்தில் காணலாம்.



கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் இரண்டு இரு மாடிக் கட்டடத்தின் ஒரு தொகுதியைப் படத்தில் காணலாம். படங்கள் : சு.பாஸ்கரன்

## இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் செம்பியன்பற்று - சுண்டிக்குளம் வீதி

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று முதல், சுண்டிக்குளம் வரையான வீதி இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

கடந்த ஒரு வருட காலத்துக்கும் மேலாக இந்த வீதி - புனரமைப்புக்கென கற்கள் பறிக்கப்பட்ட நிலையிலும், இதுவரை புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

அண்மையில் யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில், குறிப்பிட்ட வீதி இந்த மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் இதுவரை புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படாததையிட்டு, மக்கள் கவலை தெரிவித்தனர்.

மேலும் சம்பந்தப்பட்டவர்கள் இதைக் கருத்திற்கொண்டு, இந்த வீதியைத் திருத்துவதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்

### முதலுதவிக் கருத்தரங்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பூநகரி தியாக தீபம் திலீபன் மருத்துவ மனையினர் - ஆரம்ப சுகாதார முதலுதவிக் கருத்தரங்குகளை பூநகரிப் பிரதேச பாடசாலைகளில் இந்த மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து, நடத்தி வருகின்றனர்.

பூநகரி தியாக தீபம் மருத்துவ மனையின் மருத்துவர் நளாயினி தலைமையில் நடைபெற்று வரும் இந்தக் கருத்தரங்கு -

பாடசாலை ரீதியாகவும், பொது மக்களுக்காகவும் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

### நூலகவாரம் அனுஷ்டிப்பு

பூநகரி செல்லையா தீவுப் பாடசாலையில் நூலக வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இதையொட்டி அரச, அரசசார்பற்ற நிறுவனங்களிடமும், பழைய மாணவர்கள், பெற்றோர்களிடமும் நிதி திரட்டும் செயற்பாட்டில் பாடசாலை சமூகத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

## சர்வதேச வலுவிழந்தோர் தினத்தை கிளிநொச்சியில் கொண்டாட ஏற்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் அடுத்த மாதம் 3 ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச வலுவிழந்தோர் தினத்தை சிறப்பாக கொண்டாட, கிளிநொச்சி மாவட்ட மாற்றீடான வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்தகாலப் போரால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான வலுவிழந்தோர் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களின் கணிசமான தேவைகளை கிளிநொச்சி வலுவிழந்தோர் சங்கம் நிறைவேற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நானாட்டான் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நான்கு நாள் பயிற்சிப் பட்டறை நிகழ்வு

தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், சிறுவர் பாதுகாப்பு அமைப்பும் இணைந்து - மன்னார் நானாட்டான் பிரதேசத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறிகளை கடந்த 24 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை புனித அன்னாள் பாலர் பாடசாலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு - முன்பள்ளித் தலைவி புவனேஸ் தலைமையில் இடம்பெற்றது.

முதல்நாள் நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியை முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய மாவட்டப் பொறுப்பாளர் ஏற்றினார்.

முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையக் கொடியை, முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏற்றினார்.

இந்த நிகழ்வில் முன்பள்ளிக் கட்டமைப்பு பயிற்சி அம்பிறை வளவாளர் கருத்துரை நிகழ்த்தினார். சிறப்புரையை நானாட்டான் கிராம அலுவலர் நிகழ்த்தினார்.

நன்றியுரையை முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையப் பிரதேச இணைப்பாளர் வழங்கினார்.

இதுபோன்ற பயிற்சிநெறிகள் மன்னார் மாவட்டத்தின் நகர்ப்புறக் கோட்டத்திலும், பேசாலை பகுதியிலும் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பயிற்சித்திட்டங்கள் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*புறத்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை*
*வாய்மையால் காணப் படும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## அரசின் பொறுப்பற்ற நிலையும் ஐக்கிய தேசியக் கட்சியின் புகாரும்...!

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கான விடுதலைப்புலிகளின் ஆலோசனைகளின் அடிப்படையில்- பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும் என அரசதரப்பை நோக்கி பல்வேறு மட்டங்களிலும் அழுத்தங்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ள சூழலில், விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு எப்பொழுதும் தயாராக இருக்கின்ற போதிலும், அரசாங்கமே அதனைத் தொடர மறுத்து வெறுமனே காலத்தை இழுத்தடித்து, அதற்குப் பொருத்தமற்றதும் நியாயமற்றதுமான காரணங்களைக் கூறி ஏமாற்றி வருகின்றது என்ற தொனிப்பட பொதுநலவாய நாடாளுமன்றத்திடம் எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சியானது வலியுறுத்தியுள்ளமையானது - சாமாதானம் தொடர்பான இன்றைய நெருக்கடியான சூழலில் முக்கியத்துவம்மிக்கதொன்றாவே அமைந்துள்ளது.

அமெரிக்கா உட்பட ஜப்பான், கனடா, சுவிஸ், ஜெர்மனி என அனைத்து நாடுகளுமே - நோர்வே அனுசரணையாளர்கள் மூலமாகவும், நேரடியாகவும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை விடுதலைப்புலிகளும் இலங்கையரசும் விரைவில் ஆரம்பிக்கவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தலை மிக அண்மைக்காலமாக அதிக அளவில் வலியுறுத்தி வருவதை நாட்டுமக்கள் மட்டுமல்ல, சர்வதேச சமூகம் முழுவதுமே மிகவும் கூர்மையாக அவதானித்து வருகின்றது.

இந்த விடயம் தொடர்பாக விடுதலைப்புலிகளின் தரப்பினர் ஆரம்பம் முதலே தமது தெளிவானதும் - உறுதியானதுமான நிலைப்பாட்டினை மிக இயல்பாகவும் வெளிப்படையாகவும் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளபோதிலும், அரசு தரப்பினரும், ஜனாதிபதியும் இன்றுவரை ஒரு திட்டவட்டமானதும் ஆக்கபூர்வமானதுமான கருத்து நிலைப்பாட்டிற்கு வரமுடியாதுள்ளது என்பது தெட்டத்தெளிவாகியுள்ள நிலையில் - எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியின் மேற்குறித்த கருத்தானது சகல மட்டத்தினராலும் மிகவும் ஆழமாக கவனத்தில் கொள்ள வேண்டிய விடமாக உள்ளது.

ஏற்கனவே பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சியானது இவ்விடயத்தில் ஒரு தீர்க்கமான முடிவை தன் சார்பில் தெரிவித்து தன்னை வெளிப்படுத்திவிட்டது என்றே கூறவேண்டும். அதாவது விடுதலைப்புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான விடயத்திலிருந்து மீண்டும் அரசு சமாதானப்பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமேயானால் - அதற்கு தான் முழுமையான ஆதரவை வழங்கத் தயார் என ஒரு பிரகடனமாகவேஅறிவித்துவிட்டுள்ளது.

இதுவே அரசுக்கும் - ஜனாதிபதிக்கும் இப்போது சிக்கலையும் நெருக்கடியையும் எற்படுத்தி விட்டுள்ள விடயமுமாகும்.

இதுவரை காலமும் அரசு ஒருநிலைப்பாட்டை எடுத்தால் எதிர்க்கட்சி அதன் நியாயத்தன்மையையும் அவசியத்தையும் கூடக் கவனத்தில் கொள்ளாது அதனை மூர்க்கத்தனமாக எதிர்ப்பதே ஒரு வழமையாக இருந்து வந்துள்ளது.

இந்தமுறை அரசு ஒரு தீர்மானத்தை எடுக்கத் தயங்குகிறது. ஆனால், எதிர்க்கட்சி - அரசு தான் குறிப்பிடும் வகையில் நியாயமாக ஒரு முடிவை எடுத்தால் அதுவும் புலிகளும் ஏற்கெனவே வலியுறுத்தியுள்ள வகையில் முடிவை எடுத்தால் அதனைத் தாம் ஆதரிப்பதாகக் கூறியுள்ளமையானது ஒரு முக்கியத்துவமிக்க விடயமேயாகும்.

ஆனால், எதிர்க்கட்சியும் விடுதலைப் புலிகளும் ஒரு நிலைப்பாட்டிற்குவந்துள்ளபோதும், அரசு அதனை ஏற்கத் தயங்குவதானது வரலாற்றில் என்றுமில்லாதவகையில் ஒரு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த உருவாக்கிவரும் வாய்ப்பான சூழலை - அரசாங்கமும் ஜனாதிபதியும் பயன்படுத்த விரும்பவில்லை என்ற உண்மையையே உணர்த்துவதாக உள்ளது.

அதாவது அரசும் - ஜனாதிபதியும் பேரினவாத மேலாதிக்க சிந்தனைப் போக்கிலிருந்து தம்மை விடுவிக்கத் தயங்குகின்றனர் என்ற உண்மையை வலியுறுத்துவதாகவே நிலைமைகள் உள்ளன.

சமாதான முன்னெடுப்பு முயற்சிகளுக்கு நிபந்தனையற்ற முழுமையான ஆதரவை வழங்கத் தயார் என்று - அரசுக்கும் ஜனாதிபதிக்கும் தெளிவாக அறிவித்துள்ளதாகக் கூறும் ஐ.தே.கட்சியினர் அமைதிக்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் விடயத்தில் அரசின் கூட்டணிக் கட்சிகளிடையே ஒருமைப்பாடு இல்லையெனவும், பொதுநலவாய நாடாளுமன்றத்திடம் விளக்கியுள்ளனர். உண்மையில் இது ஒரு மிகச் சரியானதும் உண்மையானதுமான கருத்தேயாகும்.

ஐ.ம.சு.முன்னணியின் உள்ளக முரண்பாடுகளை சமாதான முயற்சிகள் தொடர்பான விடயங்களில் தீர்த்துக் கொள்ளும் வலு ஜனாதிபதியிடம் இல்லை. தீர்த்துக் கொள்வதற்கு ஜே.வி.பி போன்ற கட்சிகள் மனவிருப்புடையனவாகவும் இல்லை.

இதுவே இன்றைய இலங்கையின் சமாதானம் குறித்த யதார்த்த நிலையாகும்.

இதனைச் சர்வதேச சமூகம் இந்தக் கட்டத்தில் தெளிவாக உணர்ந்து கொள்ளவேண்டும். அதுமட்டுமல்ல சமாதான முயற்சிகளை எதிர்க்கட்சியின் ஆலோசனையுடனும், ஆதரவுடனும் - இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்த விடயத்திலிருந்து ஆரம்பிக்குமாறு அரசுக்கும் ஜனாதிபதிக்கும் அழுத்தம் கொடுக்கவும் வேண்டும்.

## நாடும் நடப்பும்




# வாழ்த்துமடல்களில் சினிமாப் படங்கள்; தவிர்க்குமாறு வணிகர்களுக்கு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் பண்பாடுகளையும், பாரம்பரியத்தையும் பேணும் நோக்குடன் தமிழர் பிரதேசங்களுக்குச் சினிமா நட்சத்திரங்களின் படங்கள் தாங்கிய வாழ்த்துமடல்கள், கலண்டர்கள் போன்றவற்றை எடுத்துவருவதை விடுத்து, அதற்குப் பதிலாக தமிழர்களது பண்பாட்டு அம்சங்களை பிரதிபலிக்கும் காட்சிகள், படங்கள் மற்றும் விடுதலைப் போராட்டத்துடன் தொடர்புடைய படங்களைக் கலண்டர்களிலும், வாழ்த்து மடல்களிலும் அச்சிட்டு விற்பனை செய்யுமாறு வணிகர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு சினிமா மோகத்தையும், கலாசார சீரழிவையும் தூண்டும் வகையில் அமைந்ததான கலண்டர்களையும், வாழ்த்துமடல்களின் விற்பனையையும் தவிர்த்து, ஈழத் தமிழர்களது கலாசார பண்பாட்டு அம்சங்களை பிரதிபலிக்கக்கூடிய படங்களை விற்பனை செய்யவேண்டும் என்று பல தரப்புக்களிலும் இருந்து சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே, இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# உலகத் தமிழ் கவிதைப் போட்டி மொத்தப் பரிசு இரண்டு லட்சம்

லண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகத்தால் நடத்தப்படவுள்ள 2 ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டிக்கு கவிஞர்களிடமிருந்து 'புதுயுகத் தமிழர்' என்ற தலைப்பிலான கவிதைகள் கோரப்பட்டுள்ளன.

வெற்றிபெறும் கவிதைகளில் முதற் பரிசுக்குரிய கவிதைக்கு 35 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் பரிசுக்குரிய கவிதைக்கு 25 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் பரிசுக்குரிய கவிதைக்கு 15 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

இவை தவிர ஆறுதல் பரிசுக்குரிய கவிதைகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொரு கவிதைக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

கவிதை அறுபது வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். அனைத்துலகத் தமிழர்களும் பங்குபற்றலாம். கவிதை கருத்தாளம் உள்ளதாகவும், தலையங்கத்துக்குப் பொருத்தமானதாகவும் இருத்தல் வேண்டும். சொந்த ஆக்கம் என்பதையும், ஏற்கனவே பிரசுரமாகாத கவிதை என்பதையும் உறுதி செய்தல் வேண்டும்.

அனைத்திலும் நடுவர் தீர்ப்பே இறுதியானது. தெரிவு செய்யப்படும் கவிதைகள் ஒரு நூலாக வெளியிடப்படும்.

உலகில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுவரும் இந்தக் காலகட்டத்தில், உலகெல்லாம் பரந்து வாழ்ந்துவரும் தமிழர்களின் புதுயுக வாழ்வு எவ்வாறு அமையப்போகிறது என்பதற்கு முன்னோடியாக இந்தக் கவிதைப் போட்டி நடைபெறுகிறது.

கவிதைகள் கிடைக்க வேண்டிய இறுதித் திகதி 15-12-2004 ஆகும். இலங்கையிலிருந்து கவிதைப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் தமது கவிதைகளை - பொறுப்பாளர், 2 ஆவது உலகக் கவிதைப் போட்டி - 2004, **chudaroli Publication Society, 30 St. Benedict's Mawatha, Kotahena, Colombo - 13.** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# பிக்குகள் அவமதிப்பு ஐ.தே.கவும் ஆட்சேபம்

கனேடியத் தூதரகத்தில் 3 பௌத்தபிக்குமார் தொடர்பாக கடைப்பிடிக்கப்பட்ட அணுகுமுறை குறித்து கவனம் செலுத்தியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அறிக்கையொன்றை விடுத்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி - இந்தச் சம்பவம் கவலைக்குரிய விடயமென்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக விசாரணைகளை நடத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு, வெளிநாட்டமைச்சு கனடா தூதரகம் ஆகியவற்றிடம் ஐக்கிய தேசியக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த இரண்டு பௌத்தபிக்குகளுக்கும், தாய்லாந்து பிக்கு ஒருவருக்கும் அசௌகரியம் ஏற்படுத்தும் வகையில் கனடாத் தூதரக அலுவலகத்தின் அதிகாரியொருவர் செயற்பட்டுள்ளதாக, ஜாதிக ஹெல உறுமயக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தப் பிக்குகளின் அங்கவஸ்திரங்களை அகற்றியது தொடர்பாக, அதிருப்தி தெரிவிப்பதாக கட்சியின் பதில் செயலாளர் கொட்டவெல அமரகீர்த்தி தேரர் தூதரகத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்தார்.

# ஆலோசனைசபை கூட்டத்தை பகிஷ்கரிக்க 3 கட்சிகள் முடிவு

ஜனாதிபதி சந்திரிகாவால் அமைக்கப்பட்டுள்ள தேசிய ஆலோசனை சபையின் முதலாவது அரசியல் குழுக் கூட்டத்தைப் பகிஷ்கரிப்பதென, மூன்று அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

ஐக்கிய தேசிய கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய மூன்று கட்சிகளுமே இதனைப் பகிஷ்கரிப்பதற்குத் தீர்மானித்துள்ளன.

இந்தக் கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய சமாதான ஆலோசனை சபையுடன் தொடர்புடையதாக நடைபெறவுள்ள இந்தக் குழுக் கூட்டத்தால், சமாதான செயற்பாடுகளுக்கான உதவிகள் கிடைக்காது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சமாதான செயற்பாடுகள் தொடர்பாக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து தாம் அவதானித்துக் கொண்டிருப்பதாக, முஸ்லிம் காங்கிரஸின் பிரதான அமைப்பாளர் பாயிஸ் கருத்து வெளியிட்டார்.

முன்னர் நடைபெற்ற இந்தக் குழுக் கூட்டத்தின் சூழ்ச்சி நடவடிக்கையால், முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் ஒருவரை அரச தரப்புக்கு இழுத்துக் கொண்டது குறித்து கருத்து வெளியிட்ட பாயிஸ் - அந்தச் சபைக்கு செல்லாது விடுவதற்குத் தாம் தீர்மானித்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

(தே)

# படித்த கோமாளி சுப்பிரமணிய சுவாமியும் படிப்பறியாத கொள்கையை கொண்ட வீரப்பனும்




சந்தனக் கடத்தல் வீரப்பன் இறந்துவிட்டான். ஆனால், அவனது சாவு எப்படி ஏற்பட்டது? சுட்டுக் கொல்லப்பட்டானா? தற்கொலை செய்து கொண்டானா? அம்புலன்சில் அழைத்து வரப்பட்டு வழியில் நடந்த சுற்றிவளைப்பில் சுடப்பட்டானா? இறந்த பின்னர் அம்புலன் சில் கொண்டு வரப் பட்டானா? என்பன போன்ற கேள்விகள் தற்பொழுது எழுந்துள்ளன. இந்தவகைக் கேள்விகள் எழுவதற்கும், இதற்கான விடைகளைத் தேடும் பொழுது அவிழ்க்கப்பட வேண்டிய மர்ம முடிச்சுக்களும் இறுக்கமாகவே உள்ளன.

வீரப்பனை அழைத்து வந்த அம்புலன்சில் ஓட்டுநர் இறங்கி ஓடிவிட நடந்த தாக்குதலில் அம்புலன்சின் மேல் ஏராளமான சன்னங்களின் துளைகள் உள்ளன. ஆனால், வீரப்பனுக்கு ஒரே ஒரு சூட்டுக்காயமே ஏற்பட்டுள்ளது. அதுகூட நெற்றியில் ஏற்பட் டுள்ளது. ஏன் மேலதிக சூட்டுக்காயங்கள் அவனது உடம்பில் ஏற்படவில்லை? நெற்றியில் தன்னைத் தான் சுட்டுத் தற்கொலை செய்ததால் ஏற்பட்டிருக்கலாம் என்ற கேள்வியும் ஏற்படுகின்றது. ஒருவன் சந்தேகத்துக்கிடமான முறையில் இறந்தால் விசாரணைகளின் பின்னர் அவனது உடலை எரிக்காது புதைக்கும்படிதான் கூறுவர். ஆனால் இங்கே குல வழக்கப்படி புதைக்கப்படவேண்டும் என்ற பொழுது எரிக்கும்படி பொலிஸார் நெருக்கடி கொடுத்தது ஏன்? ஆனால் எரிக்கப்படாமல் புதைக்கப்பட்டதுதான் இறுதியில் நடந்தது. புதைக்கப்பட்டால் மீண்டும் விசாரணை என்று வரும் பொழுது கிளறி எடுக்கப்படும், அதைத் தவிர்ப்பதற்காகவே எரிக்க வலியுறுத்தினார்களா? இவற்றிற்கான பதில்களைத் தேடி மனித உரிமைகள் ஆணைக் குழுக்கள் விசாரணைகளைத் தொடங்கியுளளன.

வீரப்பன் கடந்த 25 ஆண்டுகளாக மூன்று மாநில ஆட்சியாளர் களுக்குத் தலைவலியாக இருந்தவன். மூன்று மாநிலங்களின் காவற்துறையினர், அதிரடிப்படையினருக்குத் தண்ணி காட்டியவன். காட்டு அரசனாக வாழ்ந்தவன். சிலரைத் தன்னுடன் கூட்டுச் சேர்த்துச் சந்தனமரக் கடத்தல் செய்தவன். யானைத் தந்தங்களை விற்பனை செய்தவன். அவன் ஒரு கொள்கைக்காரன். ஆனால் அவனது தனிப்பட்ட திறமை அவனை எவரும் நெருங்க முடியா தவாறு உயர்த்திக் காட்டியது. அவன் ஒரு தமிழன். ஆனால் விடுத லைப் போராளியோ அல்லது விடுதலை இயக்கம் வைத்திருந் தவனோவல்லன். வனஅதிகாரிகளாலும், பொலிஸாராலும் வஞ் சிக்கப்பட்ட மலைவாழ் மக்களுக்கு உதவிகள் செய்ததால் மதிக் கப்பட்டவன். அதனால்தான் அவனது உடலுக்கு "சல்யூட்" அடித்தனர் இளைஞர்கள். சென்னை மாநகரிலேயே அஞ்சலிச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. பிரசுரங்கள் அச்சிட்டு விநியோகிக் கப்பட்டன. இவ்வாறு அவனை மக்களிடம் உயர்த்திய பெருமை வீரப்பன் வேட்டை என்று கூறிக் கொண்டு மக்களை வருத்திய தால் தான் என்பது வெளிப்படை

ஆனால், இந்த வீரப்பனை வைத்துத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைத்துக்காட்டுவதுதான் இங்கே பல சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது. பல்வேறு கால கட்டங்களில் வீரப்பனுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருப்பதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வந்தன. இவ்வாறு செய்திகளைப் பரப்புவதில் முதல் நிலைவகிப்பவர் பிரசித்தி பெற்ற இந்தி யாவின் அரசியல் கோமாளி சுப்பிரமணிய சுவாமியாகும். தான் சொல்வதில் ஏதாவது பொருள் இருக்கின்றதா? பொருள் தரக் கூடிய நம்பகத்தன்மை இருக்கின்றதா? என்று அவர் சிந்திப்பதே இல்லை. அவர் ஒரு கோமாளிதானே - அதனால் புலிகளை மக்கள மத்தியிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும், புலிகள் மேல் வெறுப்பை உண்டாக்க வேண்டும் என்பதில் அவர் நாட்டம் கொண்டவர். கன்னட நடிகர் ராஜ்குமார் கடத்தி விடுவிக்கப்பட்டதில் பல கோடி ரூபாய்கள் கைமாறியதாகவும், இதில் விடுதலைப் புலிகளுக் கும தொடர்பிருப்பதாகவும் ஊடகங்கள் பொய்யான பரப்புரை செய்தமையும், இதில் ஒருவகையே. இதேபோன்று தான் நவீன ஆயு தங்கள் புலிகளால் வீரப்பனுக்குக் கிடைப்பதாகவும், பரப்புரை செய்தனர். இவ்வாறு வீரப்பன் இருக்கும் பொழுதே பரப்புரை செய்தவர்கள், வீரப்பன் இறந்த பின்னர் விட்டு விட்டார்களா என்றால் அது தான் இல்லை. வீரப்பனைக் கண் மருத்துவம் செய்வதற்காகவே ஏமாற்றி அழைத்து வந்ததாக வெற்றி எக்காளமிட்டார் - நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பொலிஸ உயர் அதிகாரி விஜயகுமார். ஆனால் வேறொரு உயர் அதிகாரியோ, புலிகளிடம் சேர்ப்பிப்பதற்காகக் கூறியே வீரப்பனை அழைத்து வந்ததாகவும் கூறுகின்றார். அதாவது வீரப்பன் இறந்த பின்னரும் கூட புலிகளைக் களங்கப்படுத்துவதில் அதிகஅக்கறை அங்கு காட்டப் படுவது தெரிகின்றது.

பல ஆண்டுகளாகப் புலிகளுடன் தொடர்பு உள்ளது என்றால் யாரோ போய்ச் சொல்ல ஏமாந்து வெளியேவர வீரப்பன் சம்ம தித்திருப்பானா? அவன் புலிகளுடன் தொடர்பு வைத்திருப்பவ னென்று வைத்துக் கொண்டால், அவன் அந்தத் தொடர்பை அல்லவா பயன்படுத்தியிருப்பான். அப்படியாயிருந்தால் வீரப்பன் வெளியேறி .இருக்கமாட்டான். உண்மையில் தொடர்பு இல்லாத நிலையில், புலிகளுடன் சேர்க்கிறேன் என்றால் அதை ஏன் நம்ப வேண்டும். புலிகளுடன் தான் எனக்குத் தொடர்பில்லை, அவர்கள் விடுதலைக்குப் போராடுபவர்களிடம் ஏன் இவர்கள் சேர்ப்பிப் பதாகப் பொய் கூறுகின்றார்கள் என்று எண்ணி அவன் காட்டை விட்டு வெளியேறியே இருக்கமாட்டான். எனவே சுருங்கக் கூறுவதானால் புலிகளுடன் தொடர்பு இருந்தாலும் வெளி வந்திருக்க மாட்டான், தொடர்பு இல்லா விட்டாலும் வெளிவந் திருக்கமாட்டான். எனவே விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஒரு பிரசாரம் அங்கு முன் வைக்கப்படுகின்றது ஏன்பது தான் உண்மை நிலை.

தமிழ் மக்கள் ஈழத்திலே விடுதலை பெற்ற இனமாக வாழ்வதை விரும்பாத சுப்பிரமணிய சுவாமி போன்றவர்களும், அவருடன் இணைந்துள்ள தமிழின விடுதலை எதிர்ப்பாளர்களும் பல வழிகளில் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தவும், பங்கம் விளைவிக்கவும் முயன்று வருகின்றார்கள். அவர்களது செயலின்ஒரு வடிவமே வீரப்பனைப் புலிகளுடன் இணைத்துப் பேசுவதாகும்.

இவர்கள் சில நாட்களுக்கு முன்னர் அமெரிக்காவிலே விடு தலைக் கெதிரான கருத்தரங்கை ஏற்பாடு செய்தனர். தற்பொழுது இந்தியாவிலும் அதே போன்றதொரு மாநாட்டை ஏற்படுத்தி தமிழ் மக்களின் விடுதலைக் குத் தடைபோட முயல்கின்றனர்.

தமிழகத்தில் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாத கோமாளியான சுப்பிரமணிய சுவாமி, ஈழத்தில் சிங்கள ஆட்சியாளருக்குத் துணை போகும் சிலரையும், அங்கொன்றும் இங்கொன்றுமாக எங்கோ தமிழரெனச் சொல்லிக் கொண்டு வாழும் இன விரோதிகளையும் அழைத்து மாநாடு நடத்தினாலும் தமிழக மக்களையும், தமிழீழ மக்களையும் விடுதலைப் பயணத்திலிருந்து மாற்ற முடியாது என்பது உறுதி. இவ்வாறு படித்த கோமாளிகளைவிட படிப்பறியாத கொள்கைகளில் ஈடுபட்ட சந்தனக் கடத்தல் வீரப்பன் மேலானவன். ஏனெனில் அவன் தமிழின உணர்வுடன் வாழ்ந்தான். தன்னை நேசித்த மக்கள் துன்பப்பட்ட பொழுது உதவிகள் செய்தான் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

பரணி

# இவ்வார பலன்கள்
## 29-10-2004 04-11-2004

| | | | |
|---|---|---|---|
| | சந் ராகு | | |
| யுரே | 29 இர 9.20 இட.சந்<br>31 மா 4.25 விரு.புத<br>01 கா 8.39 மிது.சந்<br>02 கா 6.57 துல.செவ்<br>03 இர 9.16 கட.சந் | | சனி |
| நெப் | | | |
| | | சூ, புத கேது | செவ் குரு. சுக் |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு 4இல் சனியும், 6 இல் குருவும் சஞ்சாப்பதால் குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமும், துயரமும் மாறி மாறி நிகழும். கருமங்கள் எளிதில் கைகூடாது. பண வருவாய் ஓரளவு இருந்தாலும் செலவுகள் கட்டுக் கடங்காமல் இருக்கும். நண்பர்கள், இனத்தவர்களுடன் கருத்து வேற்றுமை இருக்கும். திருமணப் பேச்சுக்கள் காலதாமதமாகும். உத்தியோகத்தர்களுக்கு அலுவல கங்களில் வேலைப்பழுவும் எதிர்ப்புகளும் ஏற்படும. வர்த்த கர்களுக்கு இலாபம் குறைவாகவே இருக்கும். புதிய முதலீ டுகளைத் தவீர்க்கவும். மாணவர்களுக்கு கல்வியில் அவ தானமும், ஊக்கமும் தேவை.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசியில் பிறந்தவர்களுக்கு இந்த வாரம் பல நற்பலன்கள் காத்திருக்கின்றன. குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி தரும். கணவன் மனைவியிடையே அந்நியோன் னிய உறவு அதிகரிக்கும். எணணிய கருமங்கள் தங்கு தடையினறி நிறை வேறும். பிரயாணங்களில் பல நற் பலன்கள ஏற்படும். பண வருவாய் சிறப்பாக அமையும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடைபெறும். திருமணப்பேச்சுக்கள் மகிழ்ச்சியான முடிவைத்தரும். உத்தியோகத் தர்களுக்கு பதவி உயர்வு. அதிகாரிகள'ன் ஆதரவு கிடைக்கும் பலராலும் பாராட்டப்படுவார் கள். வர்த்தகாகளுக்கு வியாபாரம் ஓகோ என்று நடக்கும். நிறைய பணம் சேரும். மாணவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பர்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம்பாதங்கள்)*



மிதுனராசியினருக்கு குடும்பத்தில் நிம்மதிக் குறைவு காட்டும். இனபந்துக்களிடையே கருத்து வேற்றுமை அதிகமாகும். எதிர்பாராத செலவுகள் வந்து சேரும். தேகநலமும் இடையிடையே பாதிப்படையும். மருத்துவச் செலவுகளும் அதிகமாகும். புத்திரர்களால் செலவு அதிகரிக்கும். குடும்பப் பெண்கள் மனச்சஞ்சலத்துடன் காணப படுவர். விவாகப் பேச்சுக்கள் இழுபறிநிலையைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகமாகும். சக உதவிகளும் குறையும். வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் தேக்கம் காணும். எல்லாவற்றிலும் அவதானம் தேவை. ஊக்கக் குறைவு மறதி எனபவற்றால் மாணவர்களன் முன்னேற்றம் தடைப்படும்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் விரோத மனப்பான்மை, சச்சரவுகள் தோன்றி மறையும். புத்திரர்களால் கவலை ஏற்படும். கருமங்கள் எளிதில் கைகூடாது. தேகசுக மும் அடிக்கடி பாதிப்படையும். மருத்துவச் செலவு அத'கரிக்கும் விவாகப் பேச்சுககள் காலந்தள்ளிப்போகும. உத்தியோகத்தர்களுக்கு பலரின் ஆதரவு இருந்தாலும், வேலைப் பொறுப்புக்கள் அதிகமாகும். பதவி உயாவு பின்தள்ளிப் போகும். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் எதிர்பார்த்தலாபம் கிடையாது. கொடுத்த கடன்களை மீளப் பெறுவது கஷ்டம். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியினருக்கு குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமும், நிம்மதியும் காணப்படும். உறவினர்களிடையே பரஸபரம் பற்றுதல். ஒருமித்த கருத்துக்கள் காணப்படும். இல்லத்தில் விருந்து பசாரங்கள் நடைபெறும். பிள்ளைகளால மகிழ்ச்சியும் வருவாயும் ஏற்படும். தொழில்கள் சிறபபாக நடைபெற்று நிறைந்த வருவாய் கிட்டும். மணவாழ்க்கையை விரும்புபவர்களுக்கு கருமம் கைகூட வாய்ப்புண்டு. உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் நற் பெயர் கிடைக்கும். சக உதவிகள் சிறப்பாகக் கிட்டும் வர்த்தகர்கள் வியாபாரத்தில் கூடியலாபம் ஈட்டுவர். புதிய முதலீடுகளைச் செயயக் கூடிய காலம். வங்கி உதவிகளும் உண்டு.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கனனிராசியில் பிறந்தவர்களுக்கு காரியங்கள் சித்தியாகும. குடும்ப உறவுகள் நன்றாக இருக்கும். நணபர்களாலும், புத்திரர்களாலும் உதவ' உண்டு. பணபபுழக்கம் கூடுதலாக இருக்கும். பிரயாணங்களில் பல நற்பலன்களும், புதிய அனுப வங்களும் ஏற்படும். தேகாரோக்கியம் அதிகம் பாதிப்படையாது. குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணபபடுவர். திருமணங்கள் சற்றுத் தாமதத்தின் பின் நடக்கும். உத்தியோகத்தர்கள் மத்தியில் புகழ்கீர்த்தி ஏற்படலாம். அதிகாரிகள் கௌவரத்துடன் நடந்த கொள்வர். வர்த்தகர்களுக்கு முதலீடுகள் நன்கு விற்பனையாகும். வங்கி நிலை திருப்தியாக இருக்கும். மாணவர்கள், ஆசிரியர்களின் ஒத்துழைப்பைப் பெற்று முன்னேறுவர். சிலருக்குத் தொழில வாய்ப்புக்கிட்டும்.

### துலாம்

*(சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள் சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்)*



துலாராசியில் ஜனனமானவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். நண்பர்கள், உறவினர்களிடமிருந்து உதவிகள் கிட்டும். இல்லத்தில் நற்காரிய நிகழ்வுகள் இடம்பெறும். எடுக்கும் முயற்சிகள் வெற்றியளிக்கும். பணநிலை திருப்தியாக இருக்கும். திருமணப் பேச்சுக்கள் கால தாமதத்தின் பின் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். சகதொழிலாளரின் ஒத்துழைப்புக் கிடைக்கும். வியாபாரிகளுக்கு வர்த்தக நட வடிக்கை பொதுவாக நன்றாக இருக்கும். வருவாயும் நன்கு கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் மேலோங்குவர். சிலருக்குப் பிரயாண வாய்ப்பு கிட்டும்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிக ராசிக்காரருக்கு குடும்ப வாழ்க்கையில் பல நன்மைகள் உண்டாகும். புத்திரர்களால் மகிழ்ச்சியும் நற் பெயரும் உண்டாகும். தொடங்கும் கருமங்கள் தங்குதடையின்றி அனுகூல மாகும். பொருளாதாரநிலை திருப்தியாக இருக்கும். தேகசுகம் பாதிப்படையாது. பிரயாணங்களால் நன்மைகள் கிட்டும். திருமணப் பேச்சுக்கள் மகிழ்ச்சியான முடிவைத் தரும். உத்தியோகத்தர்கள் மகிழ்ச்சியுடன் பணியாற்றுவர். அதிகாரிகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும் வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். மொத்த வியாபாரம் செய்வோர் கூடிய இலாபம் பெறுவர். மாணவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பர். ஆசிரியர்களுடன் நல்லுறவு வளரும். கல்வித் தேர்ச்சி நன்று.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுசுராசியினருக்கு அட்டமத்துச் சனியும், பத்தில் வியாழனும் நடக்கின்றது. குடும்ப வாழ்க்கையில் அவ்வப்போது வாக்குவாதங்கள். கருத்து வேற்றுமைகள் ஏற்படும். வரவிலும் பார்க்க செலவு கூடுதலாக இருக்கும். புத்திரர்களால் செலவு அதிகரிக்கும். தொடங்குங் கருமங்கள் இழுபறியைக் காட்டும். தேகசுகமும் பாதிக்கப்படும். தேவையற்ற விடயங்களில் தலையிடாமல் இருப்பது நன்று. திருமணப் பேச்சுக்கள் தடைப்படும. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகமாகும். அதிகாரிகளின் ஒத்துழைப்புக் கிடையாது. வர்த்தகர்களுக்கு இலாபம் குறைவாகவே இருக்கும். ஆடம்பரப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடிய இலாபம் பெறுவர் மாணவர்கள் கல்வியைத் தொடர்வதில் பல இடையூறுகள் தோன்றும் தேர்ச்சி பாதிக்கப்படலாம்.

### மகரம்

*(உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்)*



மகரராசியினருக்கு குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி தரும். இனத்தவர்கள் அயலவர்களின் உதவி கிடைக்கும். பண வருவாய் சிறப்பாக அமையும். வெளி நாட்டிலிருந்து பணம் வந்து சேரும். வீட்டில்சுபநிகழ்வுகள் இடம்பெறும். தேகசுகம் சிறப்பாக இருக்கும். மங்கல வாழ்க்கையை விரும்புவோர் நற்பலன் காண்பர். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் உதவி கிடைக்கும். சிலருக்கு ஊதிய உயர்வு கிட்டும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். பணம் சேரும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில வாக்குவாதங்கள், விரோதங்கள் ஏற்பட்டு மன நிம்மதியைக் குலைக்கும். வருமானம் வீழ்ச்சிகாணும். புத்திரர்களின் உதவி குறையும். தேகசுகம் குறைவு படும். உத்தியோகத்தவர்களுக்கு அலுவலகத்தில் சச் சரவு ஏற்படும். அதிகாரிகள் கடுமையாக நடந்து கொள் வர். வர்த்தர்களுக்கு லாபம் குறையும். புதிய முத லீடுகளைத் தவிர்த்தல் நன்று. மாணவர்கள் சோம்பல தனமுடையவர்களாக காணப்படுவர்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் பல நன்மைகள் கிட்டும். எடுத்த கருமங் கள் தங்கு தடையின்றி வெற்றியைத் தரும். புத்திரர்களால் நற்பெயர் கிட்டும். பொருளாதாரநிலை சிறக்கும். தேகாரோக்கியம் பாதிப்படையாது. மங்களவாழ்வை நாடுபவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிக ளின் அனுசரணை கிட்டும். பதவி உயர்வு, வசதியான இடமாற்றம் கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்படையும். பழைய முதலீடுகள் விற்பனையாகி பணம் சேரும். நகை வியாபாரிகள் கூடுதல்லாபம் பெறுவர். மாணவர்கள் முன்னேற்றமடைவதுடன், பரீட்சைகளிலும் சித்திபெறுவர்.

# பலஸ்தீன அதிபர் அரபாத்தின் உடல்நிலை கவலைக்கிடம்!



பலஸ்தீன ஜனாதிபதி யாசிர் அரபாத்தின் உடல்நிலை கவலைக் கிடமாக உள்ள நிலையில் அவரின் றமலா மாளிகையில் வைத்தியர்கள், அவரது குடும்பத்தினர் மற்றும் அவரது சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோர் கூடியுள்ளனர். ஜனாதிபதி யாசிர் அரபாத்திற்குச் சிகிச்சையளிப்பதற்காக அவரது தனிப்பட்ட வைத்தியரின் தலைமையில் ஜோர்தானிய மருத்துவக் குழுவொன்று றமலாப் பகுதிக்கு விரைந்துள்ளது.

அரபாத்தின் மனைவியான சுகா- தற்போது பாரிஸில் வாழ்ந்து வருகிறார். அரபாத்தின் உடல்நிலை கவலைக்கிடமானதை அடுத்து அவரும் றமலா நகருக்கு செல்லவுள்ளார்.

அரபாத்தின் உடல்நிலை மோசமானதையடுத்து பலஸ்தீனப் பொலிஸார் மற்றும் படையினரும் உயர்ந்த பட்சப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பலஸ்தீன அதிபர் உயிரிழந்தால் மேற்குக்கரை மற்றும் காஸாப்பகுதியில் நிகழக் கூடிய வன்செயல்களைத் தடுப்பதற்காக இஸ்ரேல் இராணுவமும் முன்னெச்சரிக்கையாகப் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தியுள்ளது.

இவ்வாறு தகவல்கள் வெளிவந்துகொண்டிருந்தபோதிலும் - அரபாத் நேற்றுக்காலை தொழுகையில் ஈடுபட்டதாக அவரது அதிகாரிகள் தெரிவித்தனர். அரபாத் மிகவும் களைபபடைந்து பலவீனமாகக் காணபபட்டாலும் அவரால் தொழுகையில் ஈடுபடக்கூடியதாக இருந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அரபாத்தின் உடல்நிலையை அடுத்து அவரை வைத்தியசாலைக்குக் கொண்டுசென்று சிகிச்சையளிப்பது தொடர்பாக வைத்தியர்கள் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர்.

அரபாத்திற்கு வைத்தியச் சிகிச்சையை மேற்கொள்வதற்காக அவரை றமலாவிலிருந்து வெளியே கொண்டு செல்லுமாறு பிரதமர் ஏரியல் ஷரோன், பலஸ்தீனப் பிரதமர் அகமட் கூரேக்கு தொலைபேசிமூலம் தெரிவித்தார். ஆனாலும், அரபாத்தை றமலாவிலிருந்து கொண்டுசென்று அவரது சிகிச்சை முடிந்தபின்னர் மீளவும் அவர் றமலா பகுதிக்கு வருவது தொடர்பாக எந்தவிதமான தெளிவான தகவலையும் அவர் தெரிவிக்கவில்லை.

அரபாத்தின் பாத் கட்சியின் சகல உறுப்பினர்களும் வெளிநாடுகளில் வாழ்நது வருவதாகவும், எனவே அவர்கள் அனைவரையும் உடனடியாக றமலாப பகுதிக்கு வருமாறு அழைத்துள்ளதாகப் பலஸ்தீனத் தகவற் தொடர்பு அமைச்சர் அசாம் அகமட்-அல் ஜசீரா தொலைக்காட்சிக்குத் தெரிவித்தார்.

இதேவேளை தனது உடல்நிலை குணமடையும்வரை பிரதமர் கூரே முன்னாள் பிரதமர் ம..மூட் அப்பாஸ் மற்றும் சபாநாயகர் சலீம் அல் சாறெளன் ஆகிய மூன்று பேரடங்கிய குழுவிடம் தனது கடமைகளை நிறைவேற்றுமாறு அரபாத் பணித்துள்ளதாக வெளியான செய்தியை அரபாத்தின் சிரேஷ்ட உதவியாளர் மறுத்துள்ளார்.

அரபாத் மயக்க நிலையை அடைந்துள்ளதாகப் பல தகவல்கள் வெளிவருகின்றபோதும், அதனை அரபாத்தின் உதவியாளர்கள் உடனடியாகவே மறுத்துள்ளனர். அரபாத்தின் றமலா மாளிகைக்கு வெளியே பெருமளவானோர் கூடியுள்ளனர். இதில் பெருமளவு பத்திரிகையாளர்களும் அடங்குவர்.

கடந்தவாரம் அதிபர் அரபாத் தனக்கு வயிற்றுநோ ஏற்பட்டதாக வைத்தியர்களிடம் தெரிவித்ததையடுத்து, அவருக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோதிலும் எவ்விதமான நோய்க்கான அறிகுறியும் தென்படவில்லை இவர் சாதாரண காய்ச்சலாலேயே பீடிக்கப்பட்டிருப்பதாகவும், அதுவும் சிகிச்சை மூலம் இலகுவில் குணப்படுத்தி விடலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாரிஸிலுள்ள அரபாத்தின் மனைவியை அரபாத் நேரடியாகச் சந்தித்துப் பல வருடங்களாகிவிட்டதாகவும், தற்போது அவரைப் பார்க்கவேண்டுமென அரபாத் கேட்டுக் கொண்ட நிலையில் அவர் பாரிஸிலிருந்து றமலாவிற்கு வருகைதரவுள்ளார்.

பிந்திய செய்திகளின்படி யாசிர் அரபாத் மேலதிக சிகிச்சைகளுக்காக பிரான்ஸிற்குக் கொண்டுசெல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ரஷ்ய சுரங்கவயல் வெடிவிபத்தில் பதின்மூன்று தொழிலாளர்கள் பலி




ரஷ்யாவின் நிலக்கரி வயலில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 13 சுரங்கத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டுள்ளதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த வெடிவிபத்து நடைபெற்ற வேளை 90 சுரங்கத் தொழிலாளர்கள பணியில் ஈடுபட்டிருந்ததாகவும், அங்கு மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை 23 பேர் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டதாக ரஷ்ய அவசரகால அமைச்சு தெரிவித்தது.

மெதேன் வாயுவால் ஏற்பட்ட வெடிப்பே இந்த விபத்திற்குக் காரணமெனவும் தெரிவிக்கப்படுகிறது. கொல்லப்பட்ட இந்தப் 13 பேரும் நிலக்கரி வயலில் திருத்தவேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளையே இந்த வெடிவிபத்து ஏற்பட்டது.

தற்போது வெடிவிபத்து நடந்த பகுதியில் மீட்புப் பணிகள் யாவும் நிறைவடைந்துள்ளதாகவும், இந்த வெடிவிபத்துத் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ரஷ்ய அவசரகால அமைச்சு தெரிவித்தது. இந்த வெடிவிபத்து நடைபெற்ற சைபீரிய மாகாணம் கடந்த 50 வருடத்தில் முதன்முறையாக இவ்வாறான ஒரு மிகப்பெரிய விபத்தைச் சந்தித்துள்ளதாக இந்தப் பிராந்திய ஆளுநர் தெரிவித்தார்.

ஆனால் ரஷ்ய நிலக்கரி வயல்கள் பாதுகாப்பு வசதிகள் எதுவும் செயயப்படாத நிலையில் நீண்ட காலமாக உள்ளதனாலேயே இந்த விபத்துக்கள் இடம்பெறுவதாக பி.பி.ஸியின் சாரா றெயின்ஸ் போட் தெரிவித்தார்.

## கியூபாவின் புதிய கரன்சி நோட்டுக்கள்

கியூபா புதிய கரன்சி நோட்டுக்களை வெளியிட்டுள்ளது. இந்த 10 பிசோ நோட்டு வெளிநாடுகளில் அங்கீகரிக்கப்படவில்லை. அமெரிக்க லொடர் மதிப்பில் இந்த 10 பிசோ நோட்டு 1 டொலருக்குச் சமனானது.

கியூப அதிபர் பிடல் காஸ்ட்ரோ இதன் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டார். சமீபத்தில் மேடையில் தவறிவீழ்ந்து கையை உடைத்துக் கொண்ட காஸ்ட்ரோ கட்டுப் போட்டபடி விழாவில் கலந்துகொண்டார்.

# உயரமான அதிபரும் குள்ளமான அதிபரும்

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 2 ஆம் திகதி நடைபெறவுள்ளது. தற்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மீண்டும் ஜனாதிபதி யாவாரா? அல்லது ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் ஹெரி புதிய ஜனாதிபதி ஆவாரா? என்பது வாக்கு எண்ணிக்கையிற் தெரிந்துவிடும். இவர்களில் இளமையானவர் யார்? ஜோர்ஜ் புஷ்தான். அவருக்கு வயது 58 ஆகிறது. ஜோன் ஹெரிக்கு 61 வயது ஆகிவிட்டது.

அமெரிக்காவில் இதுவரை ஜனாதிபதியாக இருந்தவர்களில் மிக இளமையான ஜனாதிபதி யார் தெரியுமா? சுட்டுக்கொல்லப்பட்ட ஜோன் எவ்.கெனடிதான்.

இவர் 43 வயதில் ஜனாதிபதி ஆனார். அதிக வயதானவர் றொனால்ட் ரீகன். 77 வயதில் இவரது ஜனாதிபதிப் பதவி முடிந்தது. மிக உயரமானவர் ஆபிரகாம் லிங்கன். இவா 6 அடி 4 அங்குலம் உயரமானவர். குள்ளமான ஜனாதிபதி ஜேம்ஸ் மெடிகன் 5 அடி 2 அங்குலம். நிறை அதிகமான ஜனாதிபதி வில்லியம் ஹேறாவார்ட். இவரது எடை 130 கிலோ. இவருக்கு வெள்ளை மாளிகையில் சாதாரண குளியற தொட்டியை விட 4 மடஙகு பெரிதான குளியற தொட்டி அமைக்கப்பட்டிருந்தது.

படத்தில் காற்பந்தை எட்டி



உதைப்பது வேறுயாருமல்ல, ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் ஹெரிதான. விஸ்கோன்சின் பகுதியில் தேர்தற் சுற்றுபயணத்தின்போது கிரீன்பே விமான நிலைய வளாகத்தில் உள்ள மைதானத்தில் அவர் காறபந்து ஆடும் காட்சி.

**நிறஞ்சனாஸ்** சங்கானை

விக்ரம், பிரிதா, விவேக்
நடித்த
**திலக்** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
**TYCUS**
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.45, (பு.நே)

**நாகம்ஸ்** சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடான



ஸ்ரீகாந்த், சினேகா, கபாலி மற்றும் நாகேஷ் நடித்த
(ரீல்ஸ்)
காட்சி நேரம்:
11.00, 3.00, 7.00 (பு.நே)

**ராஜா** யாழ்ப்பாணம்.

3 ஆவது ஜனத்திரள் வாரம்
இப்பொழுது இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடான
ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால்
நடித்த
**7/G றெயின்போ காலனி**
இது ஒரு உண்மைக் கதை
பு.நே 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்
ரிக்கற் முன்பதிவு செய்துகொள்ளலாம்

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி

## சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2005

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி:- 2004.11.09 நண்பகல் 12.00 மணிவரை
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:- 2004.11.10 முற்பகல் 11.30 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி:- 2004.11.10 நண்பகல் 12.00 மணி
04. கேள்வித்தொகை, கேள்விப்பத்திரப் பணம் ஆகியவற்றிற்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 15% சேர்த்து அறவிடப்படும்.
05. மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.
06. கேள்விப் படிவங்களின் ஒரு பிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைப்பதுடன், மறுபிரதியினை இந்த அலுவலகத்திற்கு நேரிலோ அன்றேல் பதிவுத்தபாலிலோ சேர்ப்பித்தல்வேண்டும்.

## கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|---|
| **நெல்லியடி உப அலுவலகம்** | | | |
| 01. நெல்லியடி மரக்கறிச் சந்தை | 1,100,000.00 | 20,000.00 | 1,000.00 |
| 02. நெல்லியடி மீன் சந்தை | 80,000.00 | 2,000.00 | 250.00 |
| 03. கோவிற் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 15,000.00 | 3,500.00 | 250.00 |
| 04. கொட்டடிச் சந்தை | 2,200.00 | 500.00 | 250.00 |
| 05. நெல்லியடி துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் | 183,200.00 | 10,000.00 | 250.00 |
| 06. நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை இல.1 | 46,300.00 | 500.00 | 250.00 |
| 07. நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை இல.2 | 46,300.00 | 500.00 | 250.00 |
| 08. நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை இல.3 | 46,300.00 | 500.00 | 250.00 |
| 09. நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை | 216,900.00 | 3,000.00 | 250.00 |
| 10. கோவிற் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 122,300.00 | 3,000.00 | 250.00 |
| 11. கோவிற்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 15,000.00 | 500.00 | 250.00 |
| 12. கொட்டடிச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 33,900.00 | 500.00 | 250.00 |
| 13. நெல்லியடி பழைய சந்தை | 50,000.00 | 3,000.00 | 250.00 |
| **உடுப்பிட்டி உப அலுவலகம்** | | | |
| 14. உடுப்பிட்டிச் சந்தை | 330,100.00 | 5,000.00 | 250.00 |
| 15. அந்திரான் சந்தை | 13,400.00 | 500.00 | 250.00 |
| 16. நவின்டில் சந்தை | 4,500.00 | 500.00 | 250.00 |
| 17. உடுப்பிட்டி மாட்டிறைச்சிக்கடை | 222,800.00 | 2,000.00 | 250.00 |
| 18. உடுப்பிட்டி ஆட்டிறைச்சிக்கடை | 5000.00 | 500.00 | 250.00 |
| 19. அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 77,100.00 | 3,000.00 | 250.00 |
| 20. உடுப்பிட்டிச் சந்தை துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் | 41,800.00 | 500.00 | 250.00 |
| **கட்டைவேலி உப அலுவலகம்** | | | |
| 21. துன்னாலை வடக்கு சந்தை | 600.00 | 500.00 | 250.00 |
| 22. துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 32000.00 | 500.00 | 250.00 |
| 23. அல்வாய் தெற்கு மாட்டிறைச்சிக்கடை | 22000.00 | 500.00 | 250.00 |

திரு.ஏ.எம்.ஜோசெப்,
செயலாளர்,
வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி 26.10.2004

(சி-3293)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# 2 ஆவது இராணுவ அணி ஹெய்டிக்குப் புறப்பட்டது!



ஹெயட்டியில் நிலைகொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் அமைதிப் படையுடன் இணைந்து கொள்வதற்காக இலங்கை இராணுவத்தின் இரண்டாவது அணி நேற்று அங்கு புறப்பட்டுச் சென்றது.

17 அதிகாரிக ளும் 292 படையின ரும் இந்த இரண்டாவது அணியில் இடம்பெற்றுள்ளனர். ஏற்கனவே இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 14 அதிகாரிகளும் 114 படையினரும் கடந்த செப்ரெம்பரில் ஹெய்டிக்குச் சென்றிருந்தனர்.

இவர்களுடன் இணைந்து கொள்ளும் நோக்கிலேயே இரண்டாவது இராணுவ அணி ஹெய்டிக்கு அனுப்பப்பட்டது. இவர்களை வழியனுப்பும் நிகழ்வு நேற்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த வழியனுப்பு நிகழ்வில் இராணுவத்தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் சூல செனவிரத்ன, பிரதித் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, இராணுவச் செயலாளர் மேஜர் ஜெனரல் கே.பிஎகொடவல மற்றும் சிரேஷ்ட படையதிகாரிகளும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகச் சுதந்திரத்தில் இலங்கை 109வது இடத்தில்!

ஊடகச் சுதந்திரம் தொடர்பான தரப்படுத்தலில் இலங்கை 109 ஆவது இடத்தில் உள்ளதாக பிரான்ஸ் தலைநகர் பாரிசை தளமாகக் கொண்டு இயங்கும் ஆர்.எஸ்.எவ் எனப்படும் எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்புத் தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனத்தின் ஊடகச் சுதந்திரத்தரப்படுத்தலின்படி கம்போடியாவுடன் இணைந்து 109வது இடத்தில் இலங்கை இருக்கிறது.

இந்தத் தரப்படுத்தலின்படி அமெரிக்கா மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகள் ஊடகச் சுதந்திரத்தை மதிக்கும் நாடுகளின் பட்டியலில் 22வது இடத்தையும் பாகிஸ்தான் 120 ஆவது இடத்தையும், இந்தியா 128 ஆவது இடத்தையும் வகிக்கின்றன. ஊடகச்சுதந்திரத்தைப் பெரிதும் மதிக்கும் நாடுகளாக பின்லாந்து, ஐஸ்லாந்து, நெதர்லாந்து, நோர்வே, ஸ்லோவாக்கியா, சுவிஸ்லாந்து, மற்றும் அயர்லாந்து என்பன அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த அமைப்பு கடந்த 10 மாதங்களில் இலங்கையில் இரண்டு ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளமையையும், பல்வேறு சந்தர்ப்பங்களில் ஊடகச்சுதந்திரம் மீறப்பட்டுள்ளமையையும் சுட்டிக்காட்டியுள்ளது.

## ரவூப் ஹக்கீம் அகாஷி சந்திப்பு

இலங்கை வந்துள்ள ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷி நேற்றுப் பிற்பகல் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை சந்தித்து உரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது பேச்சுவார்த்தைகளை மீளஆரம்பிப்பது தொடர்பாக ஆராய்ந்ததாக ஹக்கீம் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில தனித்தரப்பாக முஸ்லிம் மக்கள் கலந்துகொள்ள வேண்டும். பேச்சுவார்த்தைகளில் தனியான ஒரு குழுவாக முஸ்லிம் சமூகம் அங்கீகரிக்கப்படுமாயின் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கத் தமது கட்சி தயாரென்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தெரிவித்தார்.

## அடுத்த....

தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுவாக ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களைத் தொடர்ந்துவரும் காலங்களிலேயே சூறாவளிகள் ஏற்படுவதாகக் கடந்த சில வருடங்களாக உலகளாவிய ரீதியில் அவதானிக்கப்பட்டிருக்கிறது.

அதிலும், அறுபது சதவீதம் சூறாவளிகள் நவம்பர், டிசம்பர் காலப் பகுதியிலேயே ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்துள்ளது.

பொதுவாக இந்த மாதங்களில் வங்காள விரிகுடாவில் ஏற்படும் காற்றுமண்டல மாற்றங்களே இந்தச் சூறாவளிக்குக் காரணம் என்றும் அந்தப் பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

## அரச...

பிரதமருடனான சந்திப்பின் போது சமாதான நடவடிக்கைகள் மற்றும் தற்போதய நிலை தொடர்பாக கலந்துரையாடியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாளைய தினம் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை யசூஷி அகாஷி சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் எனவும் குறிப்பிட்டார்.

# மனிதஉரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழு யாழ். வருகிறது!

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் நாளை யாழப்பாணத்திற்கு வருகைதரவுள்ளனர்.

மனித உரிமை ஆணைக்குழு ஆணையாளர்கள் செல்வகுமார், ஜய்னுதீன் ஆகியோர் அடங்கிய குழுவினரே யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இவர்கள் விமானம் மூலம் பலாலி வந்தடைந்து பின்னர் அங்கிருந்து யாழ்.குடாநாட்டின் மனிதஉரிமை அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்பாகவும் இதனை எவ்வாறு விரிவுபடுத்த முடியும் என்பது தொடர்பாகவும் ஆராயவுள்ளதுடன் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் மற்றும் படை அதிகாரிகள் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

# ஜனாதிபதி சந்திரிகா ஈரான் செல்லத்திட்டம்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விரைவில் ஈரானுக்கு செல்லவுள்ளதாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் இந்த விஜயமானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இருந்தும் இது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவினை மேலும் பலப்படுத்துவதாக அமையுமென வெளிவிவகார பிரதி அமைச்சர் பேராசிரியர் விஸ்வவர்ணபால தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஈரானிய தூதுவரான பெக்னாம் பெக்ரெளஷ் உடனான சந்திப்பின் பின்னரே பிரதி அமைச்சர் மேற்கண்ட தகவலை் வெளியிட்டார்.

## அயர்லாந்து...

இலங்கை இன நெருக்கடிக்கான சமாதான முயற்சி, போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கின் மீள் கட்டமைப்புப் பணிகள், தமிழ்மக்களின் மனிதாபிமானத் தேவைகள் குறித்து இச்சந்திப்பில் தமது குழுவினா் அயர்லாந்து அதிகாரிகளிடம் விபரமாக எடுத்து விளக்கியிருந்ததாகவும் தமிழ்ச்செல்வன் கூறினார்.

அயர்லாந்தின் நாடாளுமன்றத்தில் நேற்று பிற்பகல் நாடாளுமன்றக் குழு ஒன்றைச் சந்தித்து பேச்சு நடத்திய தமிழ்ச்செல்வன் குழுவினர், மாலை சமாதானம் மற்றும் நல்லெண்ணத்துக்கான கிளன்கிறி மையத்தின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தத்திட்டமிட்டிருந்தனர்.

தமிழ்ச்செல்வன் குழுவினர் நாளை நாடு திரும்பவிருப்பதாகவும் டப்ளினில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

# ஜனாதிபதி தேர்தல்...

அவர் மேலும் தெரிவித்ததாவது- அரசாங்கம் தற்சமயம் பலமுடையதாக இருக்கிறது. எதிர்வரும் மாதங்களில் அந்தப் பலம் அதிகரிக்கும்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பலம் இருப்பதால் தற்போதைய சபாநாயகரை அரசாங்கம் பதவியிலிருந்து நீக்குவதற்கு எந்தவித தடையுமில்லை.

இது தொடர்பாக அந்தக் கட்சி அங்கத்தவர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

கூடிய விரைவில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க அரசாங்கம் ஆவலுடன் இருக்கிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் இதுவரை அமைச்சர் பதவியொன்றைக் கோரவில்லை. அண்மையில் கொழும்பிலுள்ள கனடிய தூதரகத்தில் இரண்டு பிக்குகளின் ஆடைகள் களையப்பட்டது தொடர்பான புலன்விசாரணையை அரசாங்கம் மேற்கொள்ளும்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இரண்டாண்டு ஆட்சிக்காலத்தின்போது அவருக்கு வெளிநாட்டு ஆலோசகர்கள் ஆலோசனை வழங்கியதற்காக உலக வங்கியின் நிதியிலிருந்து சம்பளம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டன என்பதை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக் கொண்டுள்ளது.

தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்ற உலக வங்கியின் நிதியை ஐக்கிய தேசியக் கட்சி பயன்படுத்தியுள்ளது.

பொதுமக்களுக்கான வாழ்க்கை மேம்பாட்டுக்கான செலவினங்கள் இடம்பெறாமல் இந்த தனிப்பட்ட நிதி பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

மேலும் நிதியுதவியை வழங்கி கல்வித்துறையை அபிவிருத்தி செய்யும் கடப்பாடு அரசாங்கத்திற்கு இருககிறது. வரவு - செலவுத் திட்டத்திலிருந்து கல்வித்துறைக்காக ஒதுக்கப்பட்ட தொகையை அதிகரிக்க நிதியமைச்சு உறுதி பூண்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக் காலத்தில்.தேசிய வருமானத்தில் கல்விக்காக வழங்கப்பட்ட தொகையிலிருந்து 1.5 வீதம் குறைக்கப்பட்டது. ஆனால் இந்த அரசாங்கம் மூன்று சதவீத அதிகரிப்பை ஒதுக்கியிருக்கிறது.

ஜனவரி மாதம் தொடக்கம் பட்டதாரி மாணவர்களுக்கான மஹாபொல புலமைப்பரிசுத் தொகை அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடைகள் வழங்கப்பட்டுவிடும்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாராகவே இருக்கிறது. அவர்கள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை அலகின் கீழ் பேச்சுக்களை ஆரம்பிக்கவும் அரசு தயாராகவுள்ளது. விடுதலைப் புலிகளின் பதிலுக்காகவே காத்திருக்கிறோம்.

பேச்சுவார்த்தையின்போது அரசு தரப்பிலிருந்தும் ஓர் தீர்வுத்திட்டத்தை முன்வைக்கவுள்ளோம். அது குறித்தும் அப்போது இருபகுதியினரும் ஆராய்வார்கள்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை ஜே.வி.பி கடுமையாக எதிர்க்கிறபோதிலும் இது குறித்தும் பேச்சுவார்த்தையின் போதுதான் ஆராயமுடியும். நிரந்தரத் தீர்வொன்றை எட்டுவது குறித்தும் அரசு பேச விரும்புவதாக நாடாளுமன்றத்தில் அதிக பெரும்பான்மை கிடைத்தவுடன் சபாநாயகரை பதவிநீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வேறு ஒருவரை சபாநாயகராக நியமிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன.

அதிக பெரும்பான்மையானோர் சபாநாயகர் பதவியில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டுமென விரும்பினால் அது கட்டாயம் நிறைவேற்றப்படும்.

மேலும் தனது பதவிக்காலத்தை ஜனாதிபதி சந்திரிகா நீடிப்பதற்காக அரசியலமைப்புச் சட்டத்தை திருத்துவதற்கு அரசாங்கம் முற்படுவதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் தவறானவை.

மூன்றாவது தடவையாக ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் நோக்கம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கிடையாது.

அரசாங்கத்தின் நோக்கம் தற்போதைய தேர்தல் முறையை திருத்துவதாகும். உண்மையான ஜனநாயக நடைமுறையை தற்போதைய தேர்தல் முறைமை பிரதிபலிக்கவில்லை. அத்துடன் நாட்டின் அரசியல் உறுதி நிலைக்கு ஆபத்தாகவும் அமைகிறது. எனவே தற்போதைய தேர்தல் முறையில் மாற்றம் தேவைப்படுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

'நல்லதையே செய்வோம்'

## இடைக்கால...

ளுக்கும் சமாதான முயற்சி சம்பந்தமாகத் தீவிரமான கருத்துவேறுபாடு இருக்கின்ற காரணத்தால் சமாதான நடவடிக்கைகள் மந்தநிலையில் இருப்பதாக அவருக்குச் சுட்டிக்காட்டினோம். இந்த மந்தநிலை தொடரக்கூடாது.

இந்த மந்தநிலை தொடர்வதன் காரணத்தால் தமிழ்மக்கள் மேலும் துன்பத்துக்குள்ளாவார்கள். அவர்களின் அத்தியாவசிய அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் வட- கிழக்கில் அதிகாரக் கட்டமைப்பு இல்லை.

இதனடிப்படையில் பேச்சுக்கள் உடனடியாக விரைவில் ஆரம்பிக்கப்பட்டு, ஒரு இடைக்கால சுயாட்சி சம்பந்தமாக ஒரு முடிவு எடுக்கப்பட்டு, சமஷ்டி நிலையை ஏற்படுத்தினால்தான் சமாதான முயற்சிகள் மேலும் தொடரக்கூடிய நம்பிக்கை இருப்பதாகவும், அவர்களுக்குச் சுட்டிக்காட்டி, ஜப்பானிய அரசாங்கம் செல்வாக்கைப் பயன்படுத்தி அதை நிறைவேற்ற வேண்டுமென்றுதான் கேட்டிருக்கிறோம்.

சமாதான முயற்சியில் முன்னேற்றம் காணும்வரையில் ஜப்பான் அல்லது சர்வதேச சமூகமோ இலங்கைக்கு உதவிகளை வழங்குவது பற்றி கவனமாக இருக்கும். உதவி வழங்குவதென்பது சமாதான முயற்சியில் காணப்படும் முன்னேற்றத்துடன் சம்பந்தப்பட்டது என்பதுதான்.

அந்த நிலைமை தொடர வேண்டும் என்று நாங்கள் விளக்கியிருக்கிறோம்.

அடுத்த மாதம் சமாதான முயற்சிகள் இடம்பெறும் என்று மங்கள சமரவீர சொல்வதில் விசேடமாக ஒன்றும் நடக்கவில்லை என்று மேலும் தெரிவித்தார்.

## கண்ணீர் அஞ்சலி



அல்வாய் கிழக்கு மடத்தடியைச் சேர்ந்தவரும், ஹாட்லிக் கல்லூரி முன்னாள் அதிபரும், தீவக வலய கல்விப் பணிப்பாளருமாகிய **அமரர் பொன்னுத்துரை வேணுகோபால வாணிதாசன்** அவர்களது திடீர் பிரிவுச்செய்தி கேட்டு அதிர்ச்சியடைகின்றோம்.

அன்னாரின் இழப்பால் பரிதவித்து நிற்கும் அவரது அன்புத் துணைவியாருக்கும், பிள்ளைகள் மற்றும் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், ஆறுதல்களையும் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை

( ச 1 - 2294)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.